நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்/

egistered as a Newspaper பக்கங்கள் 8 விலை ரூபா 5·00

ஈழநாதம்

HE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 16 01-09·94 வியாழக்கிழமை ஓசை 195

## கடலிலே காவியம் படைப்போம் ஒலிநாடா இன்று வெளியீடு

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் வெளியீடான விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய பாடல் ஒலிப்பதிவு நாடாவான ''கடலிலே காவியம் படைப்போம்'' இன்று மாலை 4 00 மணிக்கு யாழ்/பல்கலைக் கழக கைலாசபதி கலைஅரங்கத்தில் வெளியிடப் படவுள்ளது. கடற்புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி நளாயினி தலைமையில் விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் திரு. சி. சேரலாதன் (7 ஆம் பக்கம் பார்க்க)

# டக்கே எடுத்துவர தடை விதிக்கப்பட்ட
# 8 பொருள்கள் மீதான தடை நீக்கம்!

## முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கெனத் தடைவிதிக்கப்பட்டிருந்த 42 பொருள்களில் 28 பொருள்கள் மீதான தடை உத்தரவு நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. பொது ஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சரவை நேற்று முதல் முறையாகக் கூடியதை அடுத்து இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா இதனை அறிவித்தார்.

மேலும் இதுகுறித்துப் பத்திரிகையாளரிடம் பேசிய பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா, தடை நீக்கப்படாதஇதர பொருள்கள் வெடிப்பொருள்கள் மற்றும், வெடிகுண்டுகள் தயாரிப்பதற்குப் பயன்படக் கூடியவை என்பதால் அவற்றின் மீதான தடை விலக்கிக் கொள்ளப்படவில் லை என்றும் குறிப்பிட்டார்.

மேலும் நிபந்தனைகள் எதுவும் இல்லாமல் அரசு இத்தடை உத்தரவை விலக்கிக் கொண்டிருப்பதாகவும், இதைப் போல் எதிர்த்தரப்பினரும் நல்லெண்ணத்துடன் செயற் படுவார்கள் எனத் தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்,

## தடை நீக்கப்பட்ட பொருள்களின் விபரம்

(கொழும்பு)

வடபகுதிக்கு எடுத்து வருவவதற்கு தடை விதிக்கப்பட்ட 42 பொருள்களில்28பொருள்களின் தடை நீக்கப்பட்டுள்ளன. தடை நீக்சப்பட்ட பொருள்ளின் விபரம் வருமாறு;

- ★ விறகு,
- ★ மண்ணெண்ணெய்,
- ★ தகரத்தில் அடைக்கப்பட்ட உணவுப்பொருள்கள்,
- ★ வானொலி, அதற்கான உதிரிப் பாகங்கள்,
- ★ தேங்காய் எண்ணெய்,
- ★ பிஸ்கட்டுகள்,
- ★ சொக்லட்டுகள்,
- ★ சுகாதாரத் துவாய்கள்,
- ★ வர்ணப் பூச்சுக்கள்,
- ★ அரிசி ஆலைக்கான உதிரிப் பாகங்கள்,

[8 ஆம் பக்கம் பார்க்க]

உள்ளே . . .
கடற்புலிகள்
சிறப்பிதழ்

## ெபற்றோல், டீசலுக்கு தொடர்ந்து தடை

(கொழும்பு]

வடபகுதிக்கு எடுத்துச்செல்லப்படுவதற்கு பெற்றோல், டீசல், தங்கம், யூரியா, கற்

மோட்டார் சைக்கிள்கள் சமையல் எரிவாயு, கந்தகம் ஸ்பிரிட் மற்றும் ரின்னர்' இரும்பு மற்றும் இரும்புப்

## ிராணுவ சதிகுறித்து விசாரிக்க
## .யிடம் லக்கி அல்கம கோரிக்கை

(கொழும்பு)

க் தேர்தல் நடை
கஸ்ட் 16-ம் திகதி
ாணுவ சதிப் புர
பெற இருந்ததாக
ிரிகையில் வெளிவந்த
திகள் குறித்து பூரண விசாரணை ஒன்று நடாத்தப்பட வேண்டுமென இராணுவ தலைமையக அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம ஜனாதிபதி டி பி. விஜேதுங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தாய்லாந்து தூதுவராக நியமனம் பெற்றுள்ள முன்னாள் தளபதி ஜெனரல் சிசில் வைத்தியரட்ண தலைமையில் இராணுவ சதிப் புரட்சி நடத்த திட்டமிடப் பட்டிருந்ததாக கூறப்பட்டிருந்தது. இது பற்றி உண்மைகளைக் கண்டறிய பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மேஜர் ஜெனரல் லக்கி அல்கம இராணுவத் தளபதி மற்றும் பாதுகாப்பு பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த ஆகியோர் மூலம் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வயதிற்கு மேற்பட்டோர்
## ைவைகள் நிறுத்த முடிவு

(கொழும்பு)

ந்த அடிப்படையில்,
ல செய்யும் அறுபது
ற்கு மேற்பட்ட ஓய்வு
அதிகாரிகளின் சேவை
ற்றாக நிறுத்த நேற்று
அமைச்சரவைக் கூட்
தீர்மானிக்கப் பட்டுள்

ளில் 70 பேருக்கும்
னோர் இராணுவம்
ஆகியவற்றில் உயர் பதவிகளில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்கிறார்கள், இலங்கை வெளிநாட்டுச் சேவையில், 50 சதவீதமானோரும் இவ் அடிப்படையிலேயே கடமையாற்றுகின்றனர்.

இளைய தலைமுறையினருக்கு வாய்ப்பு வழங்குவதே இம்முடிவுக்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ழல் அதிகாரிகளை
## ் நிறுத்தத் தீர்மானம்

## உரமானிய முறை மீண்டும் அமுலாகும்

(கொழும்பு)

உரமானிய முறையை, மீண்டும் அமுலாக்க அரசு தீர்மானித்துள்ளது. விவசாயக் கடன் நிலுவைகளையும் நிறுத்த அரசு முயற்சி எடுக்

டுள்ளது.

முன்னைய அரசு அமுல் செய்த 500 ரூபா உரக் கொடுப்பனவு நீக்கப்பட்டு உரமானிய முறை மீண்டும் அமுல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ...ழல் அதிகாரிகளை
## ...ா நிறுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் ...ட்டுள்ள அதிகாரி ...னடியாக சேவையி ...றுத்தப்படுவர் என ...வை தீர்மானித்து ...ள ராஜினாமா ...டி பணிப்புரை ஏற் ...டுக்கப் ட்டுள்ளது.

உரியமுறையில் செய்யப்ப டாத கொடுக்கல் வாங்கல்க ளும் இடைநிறுத்தம் செய்ய வும், பிரதமர் சந்திரிகா குமா ரணதுங்கா தீர்மானித்துள் ளார். எயர்பஸ் கொள்வனவு. ஆயுதக் கொள்வனவு, இந்தி யாவிலிருந்து பஸ்கள் கொள் வனவு என்பன அவற்றில் சிலவாகும்.

## பாணின் விலை குறைப்பு
## இறுதி முடிவு எடுக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

பாண் விலையை யாழ்மாவ ...டத்தில் குறைப்பது சம்பந் ...மான கூட்டம் நேற்று புனர் ...ாழ்வுப்பிரிவு அலுவலகத்தில் ...டபெற்றது.

இக் கூட்டத்திற்கு பாண் ...ற்பத்தி செய்யும் கூட்டுற ...ச் சங்கங்களைச் சேர்ந்தவ ர்களும், பேக்கரி உரிமையா ளர்களும் கலந்துகொண்ட னர்.

இக் கூட்டத்தில் பாணின் விலையை ஐந்து ரூபாவிற்கு குறைப்பதற்கு தீர்மானம் எடு க்கப்பட்ட போதிலும் இது இறுதி நேரத்தில் கைவிடப்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ...லயம் -1 பாடசாலைகள்
## ...ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்வி வலயம் ஒன்றி ...ட்பட்ட பாடசாலை ...எதிர்வரும் ஐந்தாம் ...ன்றாம் தவணை ...ள் ஆரம்பிக்கப்படும் ...த்திணைக்களம் ...ள்ளது.

இதேவேளை கல்வி வலயம் இரண்டிற்கு உட்பட்ட பாட சாலைகளில் இன்று மூன்றாம் தவணைக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரி விக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க வலயம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ...டமராட்சி கடற்பிராந்தியத்தில்
## ...மணி நேரம் பீரங்கித் தாக்குதல்

### ...ஒருவர் பலி; கடற்படையால் ஒருவர் கைது

(...மராட்சி)

...ராட்சி வடக்கு- ...கடற்பிராந்தியத்தில் ...கடற்படையினர் ...ண்ட கண்மூடித்தன ...ரங்கித் தாக்குதலில் ...பலியானார். மற் ...ரை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7-20 மணியளவில் நடைபெற்றது. ஏழு மணித் தியாலங்களாக தாக்குதல் தொடர்ந்தது. காலை காங்கேசன்துறையில் இருந்து வெற்றிலைக்கேணி நோக்கி ரோந்து சென்ற கடற்படையி னர் பொலிகண்டியில் நடாத் திய தாக்குதலில் வீட்டில் இருந்த புதுக்குடியிருப்பு மாத் தளனைச் சேர்ந்த இளைஞர் தங்கராசா பீற்றர் (வயது 26) பலியானார் இவர் பொலி

(8 ஆம் பக்கம் பார்க்க)

மீண்டும் அமுலாக்க அரசு தீர்மானித்துள்ளது. விவசா யக் கடன் நிலுவைகளையும் நிறுத்த அரசு முயற்சி எடுக் கும் எனவும் தெரிவிக்கப்பட்

செய்த 500 ரூபா உரக் கொடுப்பனவு நீக்கப்பட்டு உரமானிய முறை மீண்டும் அமுல் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சங்கங்களுக்கு

## கடனுக்கு மண்ணெய்;
## யாழ். செயலகம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கூட்டுற வுச் சங்கங்களுக்குகடன் மூல மும், பிந்திய திகதியிடப்பட்ட காசோலைக்கும், யாழ் செய லகத்தினால் மண்ணெண் ணெய் வழங்கப்படமாட்டாது என யாழ் செயலகம் அறிவித் துள்ளது,

யாழ். செயலகத்திடம் இருந்து மண்ணெண்ணெய் கொள்வனவு செய்வதென் றால் உடன் பணம் செலுத் தியே கொள்வனவு செய்ப முடியும் என அரசாங்க அதி பர் யாழ். மாவட்ட கூட்டு றவுச் சங்கங்களுக்கு அறிவித் துள்ளார்.

யாழ். அரச அதிபரின் அறி விப்புப்பற்றி கூட்டுறவுச் சங் கங்கள் கருத்து தெரிவிக்கை யில் யாழ், குடாநாட்டிற் கான உணவு மற்றும் பொருள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் வருகை குறித்து
## தகவல் எதுவும் இல்லை

### யு. என். எச். சி. ஆர். பிரதிநிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அகதி களை இலங்கைக்கு திருப்பிய னுப்புவது பற்றி உடனடித்தக வல்கள் எவையும் தமக்கு கிடைக்கவில்லை என அகதி களுக்கான ஐ. நா. உயர்ஸ்தா னிகராலய யாழ். கிளை தெரி வித்துள்ளது.

தமிழ்நாட்டில் தஞ்சமடை ந்துள்ள தமிழ் அகதிகளில் 700 பேரை இம்மாத ஆரம்பத்தில் அனுப்பிவைப்ப தற்கு தமிழ்நாடு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமை அறிந்ததே.

இந்த அகதி மக்களை எந் தக்கப்பலில் அனுப்பிவைப்பது பற்றிய விபரங்கள் தமக்கு கிடைக்கவில்லை என மேலும் தெரிவிக்கப்பட்டது. (தி), (பா)

## இன்று
## பதவி ஏற்பர்

(கொழும்பு)

பிரதி அமைச்சர்களாக நிய மனம் பெற்றுள்ள அனைவ ரும் ஜனாதிபதி மாளிகையில், ஜனாதிபதி டி- பி- விஜேதுங்கா முன்னிலையில் இன்று காலை ஒன்பதரை மணிக்கு பதவிப்பிரமாணம் செய்து கொள்ள இருக்கின்றனர்.

- ★ வானொலி, அதற்கான உதிரிப் பாகங்கள்,
- ★ தேங்காய் எண்ணெய்,
- ★ பிஸ்கட்டுகள்,
- ★ சொக்லட்டுகள்,
- ★ தாவரஎண்ணெய்,
- ★ சூரியசக்தி உபகரணங்கள்,
- ★ செவிப் புலகசெட் நாடாக் கள்,

(கொழும்பு)

வடபகுதிக்கு எடுத்துச்செல் லப்படுவதற்கு பெற்றோல், டீசல், தங்கம், யூரியா, கற் பூரம் போன்ற பொருள்கள் மீது முந்திய அரசு விதித்தி ருந்த தடையுத்தரவு இன்ன மும் நீக்கப்படவில்லை மேலும் மோட்டார் சைக்கிள்கள் சமையல் எரிவாயு, கந்தகம் ஸ்பிரிட் மற்றும் ரின்னர் இரும்பு மற்றும் இரும்புப் பாளங்கள், வெற்றுச் சாக்கு கள், மின்கலங்கள், பற்றரி, கள், இருப்பு ஆணிகள்,

[8 ஆம் பக்கம் பார்க்க]

## வடபகுதி பொருளாதாரத் தடையை
## அரசாங்கம் முற்றாக நீக்கக் கூடாது

### இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா கோரிக்கை

(கொழும்பு)

வடபகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இரு க்கும் பிரதேசத்திற்கு பொரு ள்களை எடுத்துச் செல்வது தொடர்பான கட்டுப்பாடு களை ஒரேயடியாக நீக்கக் கூடாது என்று இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா பிர தமர் சந்திரிகா குமாரணதுங் காவிற்கு ஆலோசனை கூறி யுள்ளார் என தெரிவிக்கப் படுகிறது.

மேலும் வடபகுதிக்கான பொருள் விநியோகத்தில் தடை நீக்கப்படும் அறிவிப்பு விடுக்கப்படும் முன் இராணுவ உயர்பீடத்தை பிரதமர் சந்தி ரிகா குமாரணதுங்க கலந்தா லோசித்ததாக இந்திய தொலைக்காட்சி தெரிவித்து ள்ளது.

இதேவேளை சிறுபான்மை இன மக்களின் வேண்டுகோள் களுக்கு பிரதமர் சந்திரிகா இணக்கம் காட்டுகின்றார் என்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான
## ஆரம்ப நடவடிக்கையே தடை நீக்கம்

### - சந்திரிகா குமாரணதுங்கா

(கொழும்பு)

வடபகுதிக்கான, பொருள் விநியோகத் தடையை நீக்கி யிருப்பது, வடக்கு - கிழக்கு பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசு எடுக்கவிருக்கும், பல் வேறு நடவடிக்கைகளுக்கான ஆரம்ப நடவடிக்கையாகும். இதற்கு புலிகள் இயக்கத்தி னர் ஆதரவு தெரிவிப்பார்கள் என நம்புகிறேன் என பிரத மர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கும், அரசுக் கும் இடையிலான நம்பிக்கை களை மீண்டும் கட்டியெழுப் புவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும் எனவும் அவர் தெரி வித்தார். கொழும்பு இசுரு பாயவில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாடொன் றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய பொருள்க ளுக்கான தடை வடபகுதி மக்களை கஷ்டத்திற்குள்ளா க்கியிருந்தது. தடை நீக்கப் படுவதனால் இத்துயரும் நீக் கப்படும் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு பிரச்சி னைக்கு பொருத்தமான அர சியற் தீர்வொன்றை காண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு - கிழக்கிலுள்ள

## படைத் தளபதிகளுடன்
## இன்று சந்திரிகா சந்திப்பு

வடக்கு - கிழக்குப் பகுதிக ளில் கடமையாற்றும் இரா ணுவ தளபதிகளுக்கு இன்று மகாநாடு ஒன்று நடத்தப்ப டும் என பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள் ளார்.

அப்பகுதியில் கடமையாற் றும் படையினரின் தேவை களைக் கண்டறிந்து அவர்களு க்கான பரிகாரம் வழங்குவ தும் இச்சந்திப்பின் நோக்க மாகும் எனவும் அவர் தெரி வித்தார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு

சகல வசதிகளும் கொண்ட 2 பரப்புக்காணியும், வீடும் திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் m p c. s. லேன் திருநெல்வேலி வடக்கில் உண்டு. தொடர்பு:- திருமதி வனிதாதேவி விவேகானந்தம் செம்பாட்டு லேன், பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கு (மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகாமையில்) (9251)

### உற்சவ பாதயாத்திரை

[யாழ்ப்பாணம்]

நயினைஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் இருந்து நல்லைக்கந்தன் தேர்த் திருவிழாவையொட்டி ஆண்டு தோறும் சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாஜத்தினரால் நடாத்தப்பெற்று வந்த 'நயினை - நல்லூர் பஜனைப் பாதயாத்திரை' நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகவுள்ளது. ]22]

### புதிய வீடுகள் அமைப்பு

[யாழ்ப்பாணம்]

செற்பலி பண்டிதர் குடியிருப்பில் புதிதாக அமைக்கப்படும் வீடுகள் விரைவில் மக்களுக்கு கையளிக்கப்படவுள்ளதாக தெரிய வருகின்றது. நூறு வீடுகள் அமைக்கப்படுவதாகவும் அமைப்பு வேலைகள் பூர்த்தி அடையும் நிலையில் உள்ள இவ்வீடுகள் விரைவில் சம்பிரதாய பூர்வமாக உரியவர்களுக்கு கையளிக்கப்படும் எனவும் மேலும் தெரிகிறது. இரண்டு பரப்புக்காணியுடன் கூடிய இவ்வீடுகளில் இரண்டுக்கு ஒன்று என்ற விகிதத்தில் மலசல கூடங்கள் அமைந்துள்ளன. [22)

### தலையில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பழைய பகைமை காரணமாக ஒருவர் மீது பதுங்கி இருந்து மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் அவர் தலையில்

ஜே. ஓ. சி. குண்டுவெடிப்பு

## பெண்ணை பிணையில் விடுவிக்கக் கோரிக்கை

கூட்டுப் படைத் தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளம்பெண் ஒருவரை பிணையில் விடுவிக்கும்படி கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று நீதிபதி முன்னிலையில் அவரது சட்டத்தரணிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், சந்தேக நபர் கடந்த இருவருடங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்எனவும், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதால் கண்ணாடி போட வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ள இவர், தொடர்ந்து நிபுணர்களின் ஆலோசனையைப்பெற வேண்டிஇருக்கிறது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை - திலகன்**

**(பிரபாகரன் காசிலிங்கம்)**

| தாய் மடியில் | தாயக மண்ணில் |
|---|---|
| 20 - 10 - 1974 | 1 - 9 - 1989 |

திருக்கோணேசர் வாழும் திருகோணமலையில்
மைந்தனாகப் பிறந்த மகனே.
தாய்நாட்டின் மீது அன்பு கொண்டு
ஈழத்தாய் விலங்கொடிக்க துணிவு கொண்டு
எதிரியின் பாசறையை தகர்த்து நின்றாய்
கனியாக முன் விதையான காவியமான பிரபாகரனே
செந்தமிழீழம் பிறந்திடும் நாளை.

சிரித்த முகம் காணத்துடிக்கும்
உனது தாய், சகோதரன்,
சகோதரிகள், உறவினர்கள்

65, பிரபாகரன் வீதி,
பாற்பண்ணை,
திருநெல்வேலி,

(9256)

## தொழில் நுட்பசேவையாளர் புதிய சம்பளத் திட்டம்

நடுத்தர ஒன்றிணைக்கப்பட்ட தொழில் நுட்ப சேவைகளை மீள மத்தல் தொடர்பாக கொழும்பிலுள்ள பொது நிர்வாக அமைச்சு சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இச்சேவையை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு கடந்த ஜுலை மாதம் தொடக்கம் புதிய சம்பளத்திட்டம் ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை 45 வயது கடந்தவர்களான நடுத்தர தொழில் நுட்ப வியலாளர்களுக்கு வினைத்திறமை காண் தடையிலிருந்து விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது. இது பற்றிய சுற்று நிருபம் யாழ் மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சுகாதார திணைக்களத்தில் கடமையாற்றும் 45 வயது நிறைவெய்திய மருந்துக்கலவையாளர்கள் இது வரை காலமும் வினைத்திறமைகாண்தடைப் பரீட்சையில் சித்தியடையாததற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வருடாந்த சம்பள உயர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் என்று அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ் கிளையின் செயலாளர் திரு. என். எம். கந்தசாமி தெரிவித்தார்.

### கூட்டுறவு பயிற்சி வகுப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினதும் காரியாலய உதவியாளர்களுக்கான மாவட்ட மட்ட 'பயிற்சி வகுப்பு' ஒன்று எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும். (22)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

பிறப்பு:
23-07-1942

இறப்பு:
03-08-1994



**நாகலிங்கம் தர்மராசா**

**(டைமன் வெல்டிங் உரிமையாளர்)**

அன்புடையீர்!
அமரத்துவம் எய்திய எமது குடும்ப தெய்வம்
நாகலிங்கம் - தர்மராசா
அவர்களின் அந்தியேட்டிக்கிரியையும்,
வீட்டுக்கிருத்தியமும்,
(02-09-1994) வெள்ளிக்கிழமை காலை
7-00 மணியளவில் இடம்பெறும்.
தொடர்ந்து பிரார்த்தனையும் மதியபோசனமும்
நடைபெறும்.
அத்தருணம் தங்களை குடும்ப சகிதம்
வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

நவிண்டில்,
கரவெட்டி.

இங்ஙனம்
**அன்னாரின் குடும்பத்தினர்**

## நினைவு கூருகின்றோம்...

**01. 09. 1994 ..**

1989-ம் ஆண்டு இதேதினம் மணலாறு-குமுழமுனைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**2-ம் லெப். கலியுகன்** (பொன்னுத்துரை தங்கத்துரை-தம்பலகமம் -திருமலை)

**2-ம் லெப். லுக்மன் - சலமோன்** (இராமலிங்கம் ரவிகாந்- சின்னக்கரிகல் - மன்னார்)

**லெப். ரஜிவன்** (தங்கராசா சுதாகரன்- அச்சுவேலி வடக்கு- யாழ்)

**திலகன்** (காசிலிங்கம் பிரபாகரன் - திருநெல்வேலி, யாழ்)

1990-ம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**கபில்தேவ்** (வைரமுத்து கமலநாதன் -1ம் குறிச்சி, பழுகாமம் - மட்டு)

**நிக்கலஸ்** (கனகரட்ணம் விஜயன்- ஏறாவூர் -மட்டு)

**ஜலீம்** (முகமது இஸ்மாயில் மன்சூர் - இல:20, ஏறாவூர்- மட்டு)

**கலீல்** ( - வாசு - 49, காதர்வீதி, ஏறாவூர் - மட்டு)

**சுந்தர்** (சித்திரவேல் கஜேந்திரராசா-5ம்-வட்டாரம், சம்பூர் -திருமலை)

**நிக்கலஸ்** (நாகராசா சங்கர் - 1-ம்வட்டாரம், கிண்ணியா - திருமலை)

**ரஜனி** (முந்துவேல் சௌந்தரராசன்- 6-ம் வட்டாரம், மூதூர் - திருமலை)

**லிங்கேஸ்** (வெள்ளைத்தம்பி சதீஸ்குமார்- 6-ம் வட்டாரம், சாம்பல்தீவு - திருமலை)

**சிவராஜ்** (தங்கத்துரை அன்ரனிதாஸ் -பீலியடி ,கிண்ணியா- திருமலை)

**சாள்ஸ்** (வேலுப்பிள்ளை கந்தசாமி -இல 89, பாரதிபுரம், மூதூர் -திருமலை)

**சர்வேஸ்** (ப. ரவிச்சந்திரன் - சாம்பல்தீவு-திருமலை)

**சிறி** (செல்வநாயகம் புனிதராசா- ஆசிரேஸ்சதுக்கம். உவர்மலை- திருமலை)

**ரவி** ( - - உடையார்கட்டு - முல்லைத்தீவு)

**அமலன்** (சிவலிங்கம் சரத்சந்திரன்- குமுழமுனை- மணலாறு)

**பிறேமசிறி** (சதாசிவம் கோணேஸ்வரன்-ஒதியமலை நெடுங்கேணி-மணலாறு)

**நேசன்** (பொன்னுத்துரை கனகரத்தினம்-12-ம்கட்டை விசுவமடு-முல்லைத்தீவு)

**சர்வேஸ்** (அருணாசலம் முருகன்-261, கரும்புள்ளியான், வவுனிக்குளம் -மாங்குளம்)

**அனங்கன் - சிங்கம்** (கந்தையா சிங்கராசா - 12, டி.யோகபுரம், மல்லாவி-மாங்குளம்)

**மன்மதன்** ( - - வவுனியா)

**சுகுமார்** (வீரன் அருணதேவன் - கல்மடு-வவுனியா)

**மேஜர் ரட்ணம்** (சுப்பிரமணியம் யோகலிங்கம்- ஊரியான், முரசுமோட்டை - கிளிநொச்சி)

**லெப். கரன்** (தெய்வேந்திரம் சுதர்சிங்கம்- உம்படிவம், 115-ம் கட்டை - கிளிநொச்சி)

படுகாயமடைந்தார்.

இத்தாக்குதல் சம்பவம் கலாசாலை வீதி திருநெல்வேலி கிழக்கில் நேற்று முன் தினம் நடந்துள்ளது. இதன் போது அதே இடத்தைசேர்ந்த கே. கிருஷ்ணன் (வயது 59) என்பவரே தலையில் படுகாயமடைந்தவராவார். (சி)

## பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

நரோமா கப்பல் மூலம் நாளை இரண்டாம் திகதி பயணம் செய்ய பணம் செலுத்திய பயணிகளை அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு பருத்தித்துறை இறங்குதுறைக்கு தவறாது சமுகமளிக்கும்படி யாழ். மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார். (88)


SPOKEN ENGLISH

BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்

3-9-94

(காலை 9-மணி)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்

(சி/10217)


## 31-ம் நாள் அந்தியேட்டி அழைப்பு

பிறப்பு 10-4-1914



இறப்பு 04-8-1994

அமரர்

### திருமதி இராசநாயகி பாலசுந்தரம்

[காலஞ் சென்ற பொன். பாலசுந்தரம் J. P. விதானையாரின் மனைவி]

04-08-1994 அன்று காலமான திருமதி இராசநாயகி பாலசுந்தரம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 03 09-1994 சனிக்கிழமை காலை 6 மணிக்கு அன்னாரது 3-ம் சந்தி, தொண்டைமானாறு இல்லத்தில் நடைபெற்று தொண்டைமானாறு ஆற்றில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து அவரது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

அன்னாரது ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தனிப்பட்ட அழைப்பு அனுப்ப முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

நன்றி

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

3-ம் சந்தி
தொண்டைமானாறு. (9254)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 15 - 03 - 1932

உதிர்வு: 01 - 09 - 1984

திதி: 01-09 1994

### திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி

அன்பின் பிறப்பிடமே - ஆருயிரே.
தாய்மைக்கோர் இலக்கணமே - தயாபரியே
பெண்மையின் பொக்கிசமே - பேரருளே.
கடமை கண்ணியம் தவறாத - கற்பகமே.
உண்மை வழி நின்ற - உத்தமியே
இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வழி காட்டிய - பத்தினியே.

சொல்லற்கரிய நின் செயல்கண்டு சொக்கினோம்.
நின்று வழிகாட்டாது நெடுந்தூரம் சென்றதேனோ
ஈரைந்து வருடங்கள் இமைப் பொழுதாய் கழிய
இன்றும் உன் நினைவுகள் எமைவாட்டுகிறதே.

பிரிவுத் துயரால் வாடும்,

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

சந்தை அருகாமை,
மானிப்பாய். (9252)

வம், 115-ம் கட்டை - கிளிநொச்சி)

லெப். அகிலன் (பொன்னுத்துரை நற்குணேஸ்வரன் -உதயநகர்கிழக்கு-கிளிநொச்சி)

2-ம் லெப். கனோஜ் (பாலகிருஷ்ணன் கமலநாதன் -புளியங்குளம்-கிளிநொச்சி)

நிக்கலஸ் (சிவஞானம் சுரேஸ்குமார் - இரத்தினபுரம். கிளிநொச்சி)

2-ம் லெப். அசோக் (மகாலிங்கம் இதயச்சந்திரன் ஒட்டுமடம்-யாழ்ப்பாணம்)

ஆண்டவன் (சிலுவைராசா ஜெயபாஸ்கரன்-மல்வம் உடுவில் - சுன்னாகம்)

குழந்தை (யோன்ரட்ணம் அல்பிரட் பாலசிங்கம்- -மயிலங்கூடல், இளவாலை - யாழ்)

றனிஸ்-ரனில் (சிவலோகநாதன் சுஜிகரன் - இல.5 கல்வியங்காடு-யாழ்)

அசோக் (பாலச்சந்திரன் நதீந்திரன்- அளவெட்டி தெற்கு-யாழ்)

திருமலை- அல்லை, கந்தளாய் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

கப்டன் பேனாட் (காளிக்குட்டி இரத்தினசபாபதி- புதுக்குடியிருப்பு, தம்பலகமம் திருமலை)

1991-ம் ஆண்டு மணலாற்றில் இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

குரு (வைத்திலிங்கம் வசீகரன் - முத்தர்வளவு, குப்பிளான்- யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா, முப்படையினரால் கொல்லப்பட்டதமிழ்ப் பொதுமக்கள்;

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-10216)

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்

# காமினியின் அதிகார துஷ்பிரயோகம்; விபரங்களை வெளியிடத் தயார்

## ரணில் விக்கிரமசிங்கா அறிவிப்பு

(கொழும்பு)

ஊழல், அதிகார துஷ்பிரயோகம் தொடர்பாக பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொள்ளும் சகல முயற்சிகளுக்கும் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கப்போவதாக ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

காமினி திசநாயக்காவின் ஊழல், அதிகார துஷ்பிரயோகம் தொடர்பாக சகல விபரங்களும் தற்போது தன்னிடம் இருப்பதாகவும், அவற்றை விரைவில் வெளியிடப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலின் போது, ஐ.தே.க. அரசு பாவித்த மகாவலி திட்டத்திற்கான வாகனங்கள் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் மகாவலி அமைச்சர் காமினி திசாநாயக்கா தேர்தல் பிரசார வேலைகளுக்காக சுமார் 150 க்கும் மேற்பட்ட வாகனங்களை பெற்றிருந்தார் என்றும் அவை இன்னும் ஒப்படைக்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

முன்னாள் தபால் தந்தி அமைச்சர் எம்.எஸ். அதிகாரி தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக அமைச்சிலிருந்து எடுத்த வாகனங்களை மீள ஒப்படைக்வில்லை என தெரியவந்துள்ளது.

இவர் ஐந்து வாகனங்களைப் பெற்றுக்கொண்டபோதும், இரண்டு வாகனங்களே மீள ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவை பலத்த சேதமாகி இயங்கமுடியாத நிலையில் இருப்பதாகவும் தெரியவருகின்றது.

# 8 அரசியல்வாதிகள் மீது இலஞ்சக் குற்றச்சாட்டு

## சிலர் முன்னாள் அமைச்சர்கள்

(கொழும்பு)

கோடீஸ்வரர்களான எட்டு அரசியல் வாதிகளுக்கெதிராக இலஞ்சக் குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இது பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளதாக இலஞ்சத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவ்வாறு இலஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளவர்களில் அனேகமானோர் கடந்த காலத்தில் அமைச்சர்களாக இருந்தவர்கள் எனக் கூறப்படுகிறது.

இலஞ்சக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட ஓர் அரசியல் வாதிக்கெதிரான தஸ்தாவேஜுகள் அவர் இறந்தும் மறைக்கப்பட்டுள்ளன குற்றச்சாட்டுகளுக்குள்ளானவர்கள் குறித்த விசாரணைகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவர்களில் ஒருவர் பெண் எனவும் கூறப்படுகின்றது.

இன்னும் சில அரசியல்வாதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் கிடைத்துள்ளபோதும் சில சட்டப்பிரச்சினைகள் காரணமாக விசாரணை நடாத்த முடியவில்லை எனக் கூறப்படுகிறது

# சாம்சன் குடியிருப்பில் குடிசைக்கு விசமிகள் தீ

(யாழ்ப்பாணம்)

அரியாலை சாம்சன் குடியிருப்பில்உள்ளகுடிசைஒன்றிற்கு நேற்றுமுன்தினம்இரவுஎட்டுமணிபளவில்விசமிகள் தீவைத்ததினால்இத்தீயை பெரும் சிரமத்துடன் அணைத்த வீட்டு உரிமையாளர் எரிகாயங்களிற்கு உள்ளாகி யாழ் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நாரந்தனைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து அரியாலை சாம்சன் குடியிருப்பில் வசித்துவரும் யேசுதாசன் ஜெகநாதன் -வயது 30 என்பவரே எரிகாயத்திற்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

நேற்றுமுன்தினம்இரவு8.00 மணியளவில் தனதுகுடிசை எரிவதைக்கண்டு பெரும்முயற்சி எடுத்து தீயை அணைத்தேன் இதன்போது எனக்கு கையில் எரிகாயம் ஏற்பட்டதுஎன்றும் இது விசமிகளின் வேலையாக இருக்கலாம் எனவும் காயமடைந்தவர் தெரிவித்தார்.

(88)

# இடம்பெயர்ந்தோரை குடியேற்ற காணி அன்பளிப்பு செய்ய கோரிக்கை

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்காக காணிகளை அன்பளிப்பு செய்யுமாறு பொதுமக்களிடம் சிறிலங்கா அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது சேமநல நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களை மீளக் குடியமர்த்துவது என அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இனப்பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களில் சுமார் 40,000 குடும்பங்கள் சேமநல நிலையங்களில் தங்கியுள்ளனர் ஏனையோர் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கின்றனர் இவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான இட வசதிகளைப் பெறும் பொருட்டு கப்பல், துறைமுக புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சு காணிகளை அன்பளிப்பு செய்யும்படி கோரிக்கை விடுத்துள்ளது

# ரூபவாகினி, வானொலிக்கு புதியபணிப்பாளர் நியமனம்

(கொழும்பு)

சிறிலங்கா ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்திற்குப் பணிப்பாளராக கலாநிதி சுனில் அரியரட்ண நேற்றுமுன்தினம் நியமனம்பெற்றுள்ளார்.

இதேவேளை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திற்கு ஜினதாச பீரிஸ் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றும் மேலும் தெரியவந்துள்ளது.

# சொகுசு கதிரையை புறந்தள்ளிய அமைச்சர்

(கொழும்பு)

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தமது அமைச்சு அலுவலகத்தில் உள்ள சொகுசு ஆசனத்தை ஒதுக்கிவிட்டு சாதாரண மரத்திலான கதிரையையே பாவிக்கின்றாராம்.

அமைச்சரின் அறையில் இருந்த முன்னைய சொகுசு ஆசனம் அமைச்சரின் அறையில் ஒரு மூலையில் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. நான் அமைச்சுக்கு சொகுசாக இருந்துவிட்டு போகவரவில்லை சேவை செய்யவே வந்தேன் என அவர் கூறினாராம்.

# பயனாளிகட்கு ஊக்குவிப்பு கடன்

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகமாக இம்மாத முடிவுக்குள் 240 பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கடன் வழங்குவதற்கான நடவடிக்கையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இதற்கென தற்போது சண்டிலிப்பாயில் 30 பயனாளிகளும் சங்கானையில் 30 பயனாளிகளும், உடுவிலில் 30 பயனாளிகளும், நல்லூரில் 30 பயனாளிகளும், தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களில் 30 பயனாளிகளும், பருத்தித்துறையில் 30 பயனாளிகளும், சரவெட்டியில் 30 பயனாளிகளும், சாவகச்சேரியில் 30 பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கானகடன் வழங்கல்கள் இம்மாதம் முடிவுக்குள் வழங்கப்படுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

# ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகாவே போட்டி

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கப்படமாட்டார் என தெரியவந்துள்ளது.

உடல்நலம் பாதிப்பு காரணமாக இவர் கலந்துகொள்ள விருப்பவில்லை என்பதால் சந்திரிகா குமாரணதுங்காவே ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கக் கூடிய வாய்ப்பு வெகுவாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலஞ்ச ஆணையாளர் கிளை அலுவலகங்கள் மாவட்டம்தோறும்அமையும்

(கொழும்பு)

லஞ்ச ஆணையாளர் திணைக்களத்தின் கிளைகாரியாலயங்கள் மாவட்டமட்டங்களில் திறக்கப்படவுள்ளது. லஞ்சம், ஊழல் விரயம் என்பவற்றை ஒழித்துக்கட்டுவது என்ற அரசின் நோக்கங்களை நிறைவேற்ற இவை திறக்கப்படும். உள்நாட்டு விவகார மாகாணசபைகள் கூட்டுறவுத் தகவல் தெரிவிக்கும் நிலையம் ஒன்று வெகு விரைவில் திறக்கப்படும் லஞ்சம் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை எந்த அரச ஊழியரும் அதிகாரியும் இந்நிலையங்களில் தெரிவிக்கமுடியும்.

கூட்டுறவுத்துறையில் லஞ்ச ஊழலில் தொடர்புடைய எவரேனும் கடந்த காலத்தில் சிறைத்தண்டனைக்கு உள்ளா

சலகூடங்கள் அமைப்பு

# புனர்வாழ்வு நிதியுதவியில் பலகோடி ரூபா மோசடி

## அமைச்சர் அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வு நடவடிக்கைக்காக வழங்கப்பட்ட சர்வதேச உதவிகளில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன பல கோடி ரூபா பெறுமதியான இந்த மோசடிகள் குறித்து விசாரிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படும் என துறைமுக கப்பல்துறை அமைச்சர் எம். எச். எம் அஷ்ரப் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அகதிகளுக்காக பெறப்பட்ட சர்வதேச உதவிகளில் பாரபட்சம் காட்டப்பட்டது. கோடிக்கணக்கான ரூபா மோசடி இடம்பெற்றதாக கூறப்படுகிறது. மோசடியில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்அவர் தெரிவித்தார்.

# இன்னும் ஆறு மாதங்களில் ஐ. தே.க ஆட்சியமைக்கும்

## முன்னாள் அமைச்சர் நம்பிக்கை.

(கொழும்பு)

இன்னும் ஆறு மாதங்களில் மீண்டும ஐ தே க ஆட்...

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இது தற்காலிக வெற்றியே...

## 31-ம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



மலர்வு: 14. 01. 1932

உதிர்வு: 02. 08. 1994

### திருமதி மரியாம்பிள்ளை பிலோமினா (செல்வராணி)

பொற்பதி குடத்தனையைப்பிறப்பிடமாக கொண்ட திருமதி மரியாம்பிள்ளை பிலோமினா (செல்வராணி) அவர்களின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள், அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அவரது ஆத்மா இளைப்பாற்றிற்காக செபித்த குருக்கள், துறவிகள், கன்னியர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் இதயம்நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக இன்று 1-9-94 வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு பொற்பதி புனித பேதுருவானர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு நித்திய இளைப்பாற்றிற்காக மன்றாடவும் இத்துடன் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் பிரிவினால் துயருற்று நிற்கும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பேதுருவானர் கோவிலடி,
பொற்பதி.

பலவற்றை ஒழித்துக்கட்டுவது என்ற அரசின் நோக்கங்களை நிறைவேற்ற இவை திறக்கப்படும். உள்நாட்டு விவகார மாகாணசபைகள் கூட்டுறவுத் துறையமைச்சர் அமரசிறி தொடங்கொட காலி நகர மண்டபத்தில் அரச ஊழியர் கூட்டம் ஒன்றில் இத்தகவலை வெளியிட்டார்.

லஞ்ச ஊழல் தொடர்பாக தெரிவிக்கமுடியும்.

கூட்டுறவுத்துறையில் லஞ்ச ஊழலில் தொடர்புடைய எவரேனும் கடந்த காலத்தில் சிறைத்தண்டனைக்கு உள்ளாகவில்லை என்பது கவலைக்குரியது. இத்தகைய நபர்களுக்கு எதிராக இனி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தொடங்கொட தெரிவித்தார்.

## மாநகர முதல்வருக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

தெகிவளை - கல்கிசை மாநகர முதல்வருக்கு எதிராக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட தனிநபர் ஆணைக்குழு எதிர்வரும் எட்டாம் திகதி தனது பூர்வாங்க விசாரணையை கொழும்பு கச்சேரியில் ஆரம்பிக்கவுள்ளது. மேல் மாகாணசபையின் முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவினால் இத்தனிநபர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது தெரிந்ததே.

மாநகரசபையின் சட்டவிதிகளை மீறியமை உட்பட எட்டுக்கும் அதிகமான குற்றச்சாட்டுகள் இம்மாநகர முதல்வர் மீது சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ராஜினாமா

(கொழும்பு)

சென்ற பொதுத் தேர்தலின் போது கேகாலை மாவட்டத்தில் ஐ தே க சார்பில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட ஜயதிலக்க பொடி மெனிக்கா மது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இவ் இராஜினாமா குறித்து ஐ. தே க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகராவுக்கும், பாராளுமன்ற சபாநாயகருக்கும் கடித மூலம் அறிவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்,

## ஐ.தே.க.சீரமைப்பு கட்சி கூடி விவாதித்தது

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் சீரமைப்பு தொடர்பாக நேற்று முன்தின தீவிரமாக ஆராயப்பட்டதாக கட்சி பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி டி பி. விஜேதுங்காவின் வேண்டுகோளுக்கு இணங்க இவ் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதாகவும் மிக நீண்டநேரமாக இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சி தலைவர் காமினி திசாநாயக்காவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

### சலகூடங்கள் அமைப்பு

பொது இடங்களில் நிலவும் சுகாதாரப் பிரச்சினையைக் கருத்திற் கொண்டு சங்கானை சுழிபுரம் ஆகிய பொதுச்சந்தைகளில் தேசநிர்மாணிகள் சல கூடங்களை அமைத்து வருகின்றனர்.

மூலதன ஒதுக்கீட்டு நிதியிலிருந்து அமைக்கப்பட்டு வரும் இத்தகைய வேலைத்திட்டத்தினை மேலும் பல பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கையினை தேச நிர்மாணிகள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தொழிலதிபர் காலமானார்

(டில்லி)

இந்தியாவின் பிரபல தொழிலதிபர் எல் எம். பிர்லா (85) ஞாயிறன்று லண்டனில் காலமானார் மறைந்த ஜி டி. பிர்லாவின் மூத்த மகனான இவர் எழுத்தாளருமாவார்.

விடுமுறைக்காக மூன்று வாரகால விஜயமாக டில்லியிலிருந்து லண்டன் சென்றிருந்த பிர்லா படுக்கையிலேயே மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இவரின் மறைவிற்கு இந்திய பிரதமர் இரங்கல் தெரிவித்துள்ளார்.

### நூல் வெளியீடு

தி. உதயசூரியனின் மாறாத மனங்கள் சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா கடந்த ஞாயிறு தொல்புரம் விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.


முன்னாள் அமைச்சர் நம்பிக்கை.

(கொழும்பு)

இன்னும் ஆறு மாதங்களில் மீண்டும ஐ தே க ஆட்சியமைக்கும். ஜனநாயகத்தில் வெற்றி தோல்வி சகஜம் அனைத்தும் தற்காலிகமே என முன்னாள் புனர்வாழ்வு புனரமைப்புத் துறை அமைச்சரும் எதிர்க்கட்சி எம். பியுமான பி. தயாரட்ண தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இது தற்காலிக வெற்றியே. கூட்டாட்சி ஒரு போதும் நிலைக்காது எம் ஆதரவாளர்கள் சேரக் கூடாது நாம் ஒரு போதும் கைவிடமாட்டோம் என அவர் விடுத்த பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிறந்த நாளில்...



### வீரவேங்கை சபரி
### ஹம்ஸா அத்துவிதானந்தன்
### 1,9,1967

புதிய வெற்றிகளினால்
எழுதப்பட்டுக் கொண்டிருக்கும்
உனது வரலாறு
இந்தப் பிரபஞ்சம் உள்ளவரை
வாழும்
எனவே - நீயும்

- பாசமிகு உறவுகள்-
(9232)

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேதுருவானர் கோவிலடி, பேரப்பிள்ளைகள்.
பொற்பதி,
குடத்தனை. (9235)

## 6-ம் மாத நெஞ்சத்தில் நீங்காத நடுகல் நினைவலைகள்



தாயின்
அணைப்பிலே
22. 10. 1969

தாயக அலைகளிலே
01. 03. 1994

வேவுப்புலி
### லெப்டினன்ட் மயூரன்
### சண்முகராசா செந்தில்ராஜ் (ராஜன்)
கரம்பொன் - ஊர்காவற்றுறை

எம் பாசத்தின் திருவுருவே எங்கள் அன்பு ராஜனே
எங்கு நீ சென்றாயோ.....
தன்னலமே கருதாது எம் தாயகத்தின் விடுதலைக்காய்
புலித் தலைவன் வழியே வேவுப்புலி மயூரனாய்
பாதம் நீ பதிக்கையிலே..
பாவியர்கள் விழித்தெழவே
முத்திசையின் முற்றுகைக்கும் ஆளானாய்
வியூகம் உடைத்தெறிந்து
அலைகடலில் படகானாய், பயணியானாய்.
கலங்குகின்றோம் உன் முகம்காண தற்காய்
வெதும்புகின்றோம் உன் குரல் கேட்பதற்காய் நாம்
ஆறு மாதங்கள் என்ன? இவ்வுலகை விட்டு நாம்
தொலையும் வரை உன் பசுமையான நினைவுகளும்
அன்புத் திருமுகமும் எம் மனதை விட்டு அழியாதடா
உன் ஆத்மா சாந்தி பெற தினமும்
கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கின்றோம் நாம்...

பாண்டியன் தாழ்வு
யாழ்ப்பாணம்.
(9250)

ச ஜெயராஜ்
(சுவிசில் வாழும் சகோதரர்)

# கடற்புலிகள்

## தமிழீழக் கடலிலே காவியம் படைத்துவரும்

## கடற்புலிகளின் வளர்ச்சியும் எழுச்சியும்



கடற்கண்ணித் தாக்குதல், கரும்புலித் தாக்குதல் வழி மறித்துத் தாக்குதல் எனப் பலவகையிலும் கடற்படையினரின் கடலாதிக்கம் கட்டுப் படுத்தப்பட்டு வந்தது. கடல் நீரேரியிலும், கடற்படையினர் மீதான தாக்குதல்கள் தொடர்ந்தன. கடற்கண்ணி வெடித் தாக்குதல்களில், எமது போராளிகளின் தொழி னுட்பத் திறனினால், தூரத் திலிருந்து இயக்கப்படும் கண்ணிவெடிகளும் பயன் படுத்தப்பட்டன. இந்தவகை யில் கடற்போரின் புதிய தாக் குதல் வடிவங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. கண்ணி வெடித் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டவுடன் நேர டித் தாக்குதல்களும்தொடரப் பட்ட சம்பவங்களும் கடல் நீரேரியில் நடந்தன. இறுதி யாக, காங்கேசன்துறை துறை முகப் பகுதியில் கடற்புலி களின் கொமாண்டோ அணி யினர் நடத்திய தாக்குதல், கடற்புலிகளின் போர் முறை யில் புதிய திருப்பத்தை ஏற் படுத்தியது.


கேள்வி; குடாநாட்டு முற்று கையிலிருந்து. மக்கள் போக் குவரத்துசெய்ய வழியாயுள்ள கிளாலிக் கடனீரேரிப் பகுதி யில் கடற்புலிகள் இப்போது கொண்டுள்ள மேலாதிக்கம் பற்றிய உங்கள் கருத்துஎன்ன?

பதில்; ஆனையிறவு யுத்தத் திற்குப் பின்னர், பெரியளவி லான கடற்படைத் தளத் தோடு அமைந்த இராணுவ முகாம் வெற்றிலைக்கேணி யில் அமைக்கப்பட்டது அத் தோடு பூநகரிப் பிரதேசத்தை

புலிகளிடம் உள்ளன. நான்கு நீருந்து விசைப்படகுகள் கடற் புலிகளின் தாக்குதல்களின் போது களத்திலேயே அழிக் கப்பட்டன, எதிரியின் போர் ப்படகுகளைக் கொண்டே, அவனது ஆதிக்கத்திலிருந்த கிளாலிக்கடல் நீரேரி இன்று

கிக்கப்படும்போது படகு பெ றும் உதைப்பு, அதற்கேற்ப அதன் வேகம் என ஒவ்வொரு அங்கமும் ஒவ்வொரு போரா ளிக்கும் கற்பிக்கப்படுகின்றது ஒரு போராளி தனியே படகு ஓட்டுபவராக மட்டும் பயிற்சி பெறாது, அந்தப் படகில்

கப்பட்ட தாக்குதலில் முத முதலாககொமாண்டோ படை யணி ஈடுபடுத்தப்பட்டது. இந்த தாக்குதல் வெற்றிக்கு ஆண், பெண் போராளிகள் என இருதரப்புமே பங்காற்றி னர். இந்தத் தாக்குதலில் முத லாவது பெண் கடற்கரும்புலி




கடற்புலிகளால் வடிவமைக்கப்பட்ட
விசைப் படகில் தலைவர் பிரபாகரன்

கடற்புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கி றது.

கேள்வி: கடற்புலிகளின் போர்முறைத் தொழினுட்பத்

எந்தவொரு செயற்பாட்டை யும் ஆற்றக்கூடியவராக இரு க்க வேண்டும் என்பதில் கவ னம் செலுத்தப்படுகின்றது. நவீன ரேடார் சாதனங்களு

கப்டன்அங்கயற்கண்ணி வீரச் சாவடைந்ததும் குறிப்பிடத்த க்கதுஉடல், உளரீதியாகபெண் கள்ஆண்களுக்குச்சளைத்தவர் களல்லர் என்பது இங்கே நிரு பிக்கப்பட்டிருக்கின்றது.



## தேசியத் தலைவருடன் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை

"கடற்புலிகளின் வரலாற்று வளர்ச்சி துரிதமானது. அபாரமானது திகைப்பூட்டும் சாதனைகள் நிறைந்தது. தேசிய விடுதலைப் போரை புதிய பரிமாணங்களில்முன்னோக்கி நகர்த்திச் செல்வதில் கடற்புலிகளின் பங்கு முக்கியமானது.

தரையில் இராணுவத்தினரின் செயற்பாடுகளை ஒடுக்குவதோடு, கடலிலும்கடற்படையினரின் நடமாட்டத்தையும், மேலாதிக்கத்தையும் முடக்கினால் தான் தமிழீழ இலட்சியம் சாத்தியமாகும் என்ற எமது தேசியத் தலைவரின் எண்ணத்தில் எழுந்ததுதான் கடற்புலிகள்.''

**-கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை**

**கடற்புலிகளின் வரலாற்று வளர்ச்சியும் எழுச்சியும் பற்றி திரு. சூசை அவர்கள் ஈழநாதத்திற்கு நேர் காணலொன்றை அளித்தார். அந்நேர் காணலை இங்கேதருகிறோம்**

கேள்வி:- விடுதலைப்போரின் தொடரோட்டத்தில் இரண்டாம் கட்ட ஈழப்போர் முக்கிய இடம் பிடிக்கின்றது. யாழ் குடாநாட்டை தமிழீழத்தின் ஏனைய பகுதிகளிலிருந்துதுண்டித்து, முற்றுகைப் போரை பிரதான தந்திரோபாயமாக உருவாக்கியது சிறிலங்காஅரசு முற்றுகையின் முக்கிய அங்கமான சிறீலங்கா அரசின் கடலாதிக்கத்தைஉடைத்தெறிந்த பெருமை கடற்புலிகளையே சேரும். இந்த வளர்ச்சியினை மிகக் குறுகிய காலத்தில் எவ்விதம் சாதித்தீர்கள்?

பதில்:- எதிரியின் கடலாதிக்கத்தைத் தகர்க்க வேண்டிய தேவையை பெரிதும் உணர்த்தியிருந்தது சிலாபத்துறை, ஆனையிறவு சமர்களாகும். சிறிலங்கா அரசு கடல் வழியாக தனது பலத்தைப் பிரயோகித்து. எங்களது போர் முயற்சிகளுக்கு குறுக்கே நின்றது. அதுமட்டுமல்லாது, தமிழீழத்தைப் பொறுத்தவரை வெளியுலகத் தொடர்புகளுக்கும் போராட்டத் தேவைகளுக்கான விநியோகங்களுக்கும் கடல் வழித்தொடர்பு முக்கியமானது இந்த நடவடிக்கைகளை தனது கடலாதிக்கத்தின் மூலம் எதிரி தடுத்துக் கொண்டிருப்பதை நாங்கள் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இந்த நிலையிலேயே 91ம்ஆண்டின் பிற்காலப் பகுதியில்கடற்புலிகள் தமது செயற்பாடுகளை விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. கடற்புலிகளின் சிறப்புத் தளபதியாக தலைவரால் நான் நியமிக்கப்பட்டேன். தலைவரால் வகுக்கப்பட்ட கடற்புலிகளின் வேலைத்திட்டங்கள் விரைவாக முன்னெடுக்கப் பட்டன. கடற்புலி போராளிகளுக்கு அடிப்படைப் பயிற்சிகளோடு, விசேட பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. படகோட்டுவதிலுள்ள நவீனதொழினுட்ப அறிவு, ரேடார் சாதனங்களைக் கையாளுதல், போர்ப் படகுகளை வடிவமைத்தல், நிர்மாணித்தல் போன்றதுறை சார்ந்த பயிற்சிகளும் வழங்கப்பட்டன. கடற்போர் சம்பந்தமான விசேட பயிற்சிகள் ஒருபுறம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்க, மறுபுறம் தாக்குதல் நடவடிக்கைகளிலும் கடற்புலிகள் இறங்கினர். இப்படியான பல பயிற்சிகள் செயற்பாடுகள் மூலம் கடற்புலிகள் ஒரு வலுமிக்க சக்தியாக உருவாக்கம் பெற்றது

கேள்வி: கடற்புலிகளின் தாக்குதல் வடிவங்களின் வளர்ச்சிப் போக்கு எவ்விதம் அமைந்தது?

பதில்: ஆரம்பத்தில் கடற்கண்ணி வெடிகளின் மூலம், கடற்படையினரின் போர்ப் படகுகள் கடற்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. கடற்கண்ணி வெடித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வடமராட்சிக் கடற்பரப்பில் வைத்து முதலாவது கடற்கரும்புலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோர் சிறிலங்கா கடற்படையினரின் பாரிய போர்க் கப்பலைச் சேதமாக்கினார்கள். தீவகக் கடற்பரப்பில், 91-ம் ஆண்டு ஒன்பதாம் மாதம் கடற்கண்ணித் தாக்குதல் போர் முறையில் கடற்படைப் படகொன்று மூழ்கடிக்கப்பட்டது. இரண்டு அதிகாரிகள் உட்பட ஏழு கடற்படையினர் இத்தாக்குதலில் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல் நடந்த பத்து தினங்களில், நயினாதீவிலிருந்து காரைநகர் கடற்படைத் தளத்துக்குச் சென்று கொண்டிருந்த இரு ரோந்துப் படகுகள் கடற்புலிகளால் வழிமறித்துத் தாக்கப்பட்டன. இவ்விதமாக திற்குப் பின்னர், பெரியளவிலான கடற்படைத் தளத்தோடு அமைந்த இராணுவ முகாம் வெற்றிலைக்கேணியில் அமைக்கப்பட்டது அத்தோடு பூநகரிப் பிரதேசத்தை இராணுவம் ஆக்கிரமித்து நாகதேவன் துறையிலும் ஒரு கடற்படைத் தளத்தை அமைத்தது. 1992 ஜூலை மாதம் பலவேகய-2 நடவடிக்கையின் பின்னர் இராணுவ - கடற்படை வேலியொன்றும்அமைக்கப்பட்டது. இக்காப்பு அமைக்கப்படுவதற்கு முன்னர் இரு தடவைகள், பூநகரியிலிருந்து ஆனையிறவுக்குச் சென்ற இரு கடற்படைப் படகுகள் தாக்கப்பட்டன பலவேகய-2 நடவடிக்கையின் பின்னர் இராணுவம் குடாநாட்டு முற்றுகையை இறுக்கியது. இதனை அடுத்து, கடனீரேரியிலும் கடற்புலிகளின் தாக்குதல்கள் தொடரத் தொடங்கின. 27 02-93 அன்று கிளாலிக் கடலில் கடற்புலிகளின் கண்ணியில் கடற்படை ரோந்துப் படகொன்று சிக்கியது. ஒரு சில தினங்களுக்குள் நேரடிமோதலொன்றில் கடற்படைப் படகொன்றும் அழிக்கப்பட்டது. 26-08-93 அன்று இரு கரும்புலித் தாக்குதல்களில், நீரூந்து விசைப்படகுகள் இரண்டு மூழ்கடிக்கப்பட்டன. இதுதவிர மக்கள் போக்குவரத்து பாதுகாப்புப் பணியில் பல தடவைகள் நேரடி மோதல்களில் கடற்படையினருடன் கடற்புலிகள் மோதியுள்ளனர். கடற்படையினரின் கடலாதிக்கத்தை; கடனீரேரியில் கட்டுப்படுத்துவது என்பது ஒரு நீண்ட தொடரான தாக்குதல்களின் மூலமே செயலுக்கு வந்தது. பூநகரி இராணுவகடற்படைத் தளம் மீதான தவளைத் தாக்குதல், கிளாலிக் கடனீரேரியில் கடற்புலிகளின் மேலாதிக்கம் வர ஓர் காரணமாக அமைந்தது, பூநகரி முகாமிலிருந்து கைப்பற்றப் பட்ட ஐந்து நீரூந்து விசைப் படகுகளும், ஏற்கெனவே மண்டைதீவிலிருந்து கைப்பற்றப்பட்ட நீரூந்து விசைப் படகொன்றும் என ஆறு நீரூந்து விசைப்படகுகள் இன்று கடற்புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

கேள்வி: கடற்புலிகளின் போர்முறைத் தொழினுட்பத்தின் வளர்ச்சி எவ்வாறு உள்ளது?

பதில்; கடற்புலிகளின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்ட காலம் தொட்டே போர் முறைத்தொழினுட்ப வளர்ச்சி எந்தவொரு செயற்பாட்டையும் ஆற்றக்கூடியவராக இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தப்படுகின்றது. நவீன ரேடார் சாதனங்களுட்பட, எந்த ஒரு சாதனத்தையும் கையாளக்கூடியவனாக ஒரு போராளி இருக்க வேண்டுமென்பதற்காக போர் முறைத் தொழினுட்பத்தில் கூடிய கவனம் செலுத்தப்படு கப்டன்அங்கயற்கண்ணி வீரச்சாவடைந்ததும் குறிப்பிடத்தக்கது உடல், உளரீதியாகபெண்கள்ஆண்களுக்குச்சளைத்தவர்களல்லர் என்பது இங்கே நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. உலக நாடுகளில் நடைபெற்று வரும் டிரையத்லான் போட்டிகளையும், கடற்புலிகளிடையே நடத்தியுள்ளோம். இவற்றிலும் விகிதாசார அடிப்படை




**கடற்கரும்புலிகளால் பருத்தித்துறைக் கடலில் மூழ்கடிக்கப்பட்ட 'சுப்பர் டோறா' வகையைச் சேர்ந்த பீரங்கிப் படகு**

தலைவரின் நேரடிப் பார்வையில் வளர்ந்து வருகின்றது. கிட்டு-92, கடற்கண்ணி வெடிகள் தொடக்சம், புதிதாக வடிவமைக்கப்பட்ட குருவி என அழைக்கப்படும் அதிவேக ரோந்துப் படகுவரை தலைவரின் சிந்தனையில் உதித்தவைதான். புதிதாக போர்ப்படகு ஒன்று வடிவமைக்கப்பட்டு அது வெள்ளோட்டம் விடுக்கப்பட்டு அதனுடைய பெறுபேறு வரும்வரை தலைவரின் தீவிர கவனம் இருந்து வருகின்றது. ஒரு போர்ப்படகிலே பொருத்தப் படும் ஆயுதம், அது பிரயோகின்றது.

கேள்வி:- கடற்புலிகளின் படையணிகள், பெண்போராளிகளின் பங்களிப்பும் செயற்பாடும்எந்தளவுக்கு உள்ளது?

பதில்:- கடற்புலிகளில், கொமாண்டோ அணியுட்பட புதிதாக இரண்டு படையணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் பெண் போராளிகளின் பங்கு, ஆண் போராளிகளுக்கு சமனாகவே உள்ளது. அண்மையில் காங்கேசன்துறையில் கட்டளைத் தாய்க்கப்பலும், அதன் பாதுகாப்பு டோறரபடகும் தகர்க் யில் பெண்போராளிகளே கூடுதலான வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள் இந்த வகையில், கடலிலும் தங்கள் சாதனைகளை பெண் போராளிகள் நிலைநாட்டி வருகின்றார்கள்.

கேள்வி: யாழ் மாவட்டத்தை தவிர, கடற்புலிகளின் செயற்பாடுகள், தமிழீழத்தின் எம் மாவட்டங்கள் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

பதில்: வடகடலில், முல்லைத்தீவு, மன்னார் பிரதேசங்கள் வரை கடற்புலிகளின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்

ர் சிறப்பிதழ்

# இரண்டாம் ஈழப்போரும் கடற் புலிகளும்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கடற்புலிகளின் போர்ப் பிரதேசமானது போர் முறையில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, சிறிலங்கா ஆயுதப் படையின் போர்முறைத் திட்டத்தில் பெரும் பாதிப்புக்களையும், பின்னடைவுகளையும் ஏற்படுத்தியது என்பதில் சந்தேகமில்லை.

இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பிக்கப்பட முன்னரே, கடற்புலிகளின் செயற்பாடுகள் ஆரம் பிக்கப்பட்ட தாயினும், 1991ஆம்ஆண்டின்பிற் பகுதியில் இருந்தே இதன் செயற்பாடுகள் தீவிரமாக முடுக்கி விடப்பட்டதென்றே கூறலாம். இதற்கு இரண்டாம் கட்ட ஈழப்போர் கடற்புலிகளின் உடனடித் தேவையையும் அவசியத்தையும் உணர்த்தியமையும் காரணமாகியது.

இரண்டாம் ஈழப்போர் தொடங்கி சுமார் ஒரு வருட காலத்திற்குள் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பல முகாம்கள்மீதான தொடர்ந்த தாக்குதல்களில் கடல் வழித் தொடர்பைப் பெற்ற முகாம்களில்-முல்லைத்தீவு, சிலாவத்துறை, ஆனையிறவு-மட்டுமே சிறிலங்கா இராணுவத்தால் தாக்கு பிடிக்க முடிந்தது. இந்த வகையில், இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஒருவருட முடிவில் வடபகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் இருப்பானது கடற்படையுடன் நேரடியாக இணைந்ததாகவே மாறியது.

இந்நிலையில், ஏற்கனவே கடற்புலிகளின் தேவைகுறித்து தெளிவான சிந்தனையைக் கொண்டிருந்த தலைவர் பிரபாகரன், தனது சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுத்து, கடற்புலிகளின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை காட்டினார். இவ்விரிவாக்கும் முயற்சி ஆனையிறவுச் சமரைத்

கட்டளைக் கப்பல்களான 'எடித்தாரா', 'அபிதா' என்பனவற்றின் மீது இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் முதலாவது தாக்குதல் 10-07-90 இல் வல்வைக் கடலில், மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியகரும்புலிகளால் நடத்தப்பட்டது. இரண்டாவது தாக்குதல் 04-05-1991 இல், கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோரால் நடத்தப்பட்டது.

இந்தவகையில், 1990 யூனிலிருந்து 1991 யூன் வரையிலான காலப் பகுதி கரும்புலித் தாக்குதல் வடிவமே கடற்புலிகளின் போர் வடிவத்தில் முக்கிய இடம் பெற்றதெனலாம். ஆனால் இரண்டாம் காலகட்டத்தில் இப்போர் வடிவம் மாறியதோடு தாக்குதல் நடவடிக்கைகளும் அதிகரிக்கத் தொடங்கியது.

இதேசமயம் வடபகுதியில் உள்ள முகாம்களுக்கான கடல் வழித் தொடர்பு பற்றிச் சிறிலங்கா பெரும் அக்கறை கொண்டது. கடல்வழித் தொடர்புகள் அற்ற நிலையில், முகாம்களின் இருப்பு கேள்விக்குள்ளாகும் என்ற நிலையில் சிறிலங்கா கடற்படை விரிவாக்கம் செய்யப்பட்டது.

இந்த வகையில்புதியவகைப் பீரங்கிப் படகுகளும், ரோந்துப் படகுகளும் கொள்வனவு செய்யப்பட்டன. அதே வேளை தரையிறக்கும் கப்பல்களும் சிறிலங்கா கடற்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டன. இக்காலப்பகுதியில், சிறிலங்கா கடற்படை பெரியதொரு வளர்ச்சியைக் கண்டதெனலாம்.

## 1991 யூலை இருந்து 1992 யூன் வரை

## சிறிலங்காவின் போர்முறைத் திட்டம்

இதே சமயம் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அதிகரித்ததைத் தொடர்ந்து ஆழம் குறைந்த கரையோரங்களில் வேகமாகச் செல்லக்கூடிய படகுகளை சிறிலங்கா கடற்படை கொள்வனவு செய்தது. இந் நீருந்து விசைப்படகுகள். ஆழங் குறைந்த பகுதிகளில் புலிகளுடன் போரிடுவதற்கும், விடுதலைப் புலிகளின் கடல் வழிப்போக்கு வரத்தைக் கண்காணிப்பதற்கெனவும் கொள்வனவு செய்யப்பட்டது. இக் கொள்வனவில் கொழும்பில் தற்கொலைப் படைவீரர்களின் தாக்குதலுக்கு இலக்காகிக் கொல்லப்பட்ட அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ முக்கியபங்காற்றினார்.

இதேசமயம், சிறிலங்கா இராணுவமானது யாழ்ப்பாண குடா நாட்டின் மீதான முற்றுகைக்கும் தாக்குதலுக்குமாக ஒரு படி நகர்ந்திருந்தது. 1991 ஒக்டோபரில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பரேசன் வலம்புரியே இந்நோக்கத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது. இவ்ஒப்பரேசன் வலம்புரியுடன் பூநகரிப்பாதை மூடப்பட்டது.

இந்நிலையில் போக்குவரத்தில் குடாக்கடல் நீரேரியின் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கியது. இருப்பினும் ஊரியான் கொம்படிப் பாதைகள் திறக்கப்பட்டிருந்தமையால், ஒடுங்கிய ஆனையிறவுக்கடல் நீரேரியே போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

இதேசமயம் இந்தியக் கடற்படையின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதில் சிறிலங்கா தீவிர அக்கறை காட்டியது. இந்தியாவும் அதற்குப் பச்சைக் கொடி காட்டி

ஆலங்கேணிப் பகுதிக்கும் இடையில் கடல்வழிப்பாதை திறக்கப்பட்டபோது அப்பாதை. பயணிகள் போக்குவரத்திற்கு பெரும் அபாயம் நிறைந்ததாக இருந்தது.

இதனைத் தொடர்ந்து கடற்புலிகளின் போர்முறைத் திட்டமும் மாற்றமடைய வேண்டிய அவசியம் வந்தது. நேரடி மோதல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக



இதை நிரூபிக்குமாப் போன்று பல படுகொலைகளை இக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை மேற்கொண்டது.

மாறியது. படகுச் சேவைகள் இடம்பெறும் தினங்களில் பெரும்பாலானவை மோதல் நடைபெறும் தினங்களாக

வடிவங்களையும் கையாளத் தொடங்கினர். எதிரிகளின் கடற்படைப் படகுகளை வழிமறித்து தாக்குவதோடு, சுற்றி வளைத்துத் தாக்கும் போர்முறைக்கும் முன்னேறினர். அத்தோடு, கரும்புலித் தாக்குதல்களையும் இணைத்துக்கொண்டு சிறிலங்கா கடற்படைக்கு பெரும் சேதத்தையும் விளைவித்தனர்.

இந்த வகையில், கிளாலிக் கடல் நீரேரியில், 26-08-93 இல் இரு நீருந்து விசைப் படகுகள் கடற்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டன. இதில், 10 க்கும் மேற்பட்ட சிறிலங்கா கடற்படையினர் கொல்லப்பட்டதோடு, கனரக துப்பாக்கிகள் இரண்டும் (50 கலிபர்) கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன. இம்மோதலில் மேஜர் நிலவன், கப்டன் மதன் ஆகிய கரும்புலிகள் வீரச்சாவை அடைந்தனர்.

இத்தாக்குதல் நடந்து ஒரு வார காலத்திற்குள் இதை ஒத்த தாக்குதலொன்று பருத்தித்துறைக் கடற்பரப்பிலும் நடந்தது, ஆனால், இம்முறை கடற்புலிகளிடம் சிக்கியது சிறிலங்கா கடற்படையின் ரோந்துப் படகுகளில் பிரபலம் பெற்றதும், அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமுமான இஸ்ரேல் தயாரிப்பு 'சுப்பர் டோறா' படகு ஆகும். இப்படகு புலிகளினால் வழிமடக்கித் தாக்கப்பட்டு, கரும்புலிகள் மூலம் மூழ்கடிக்கப்பட்டதானது கடற்புலிகளின் சாதனைகளில் முக்கியமானது. இத்தாக்குதலில் கரும்புலிகளான மேஜர் புகழரசன், கப்டன் மணியரசன் ஆகியோர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இதேசமயம் இத்தாக்குதல் சிறிலங்கா கடற்படைக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. அதேசமயம் சிறிலங்

றுகை நெருக்கடிக்குள்ளான வேளையில்தான், கடல்வழி இறங்கு துறைகளை அடைப்பதற்கான நோக்கில் ஒப்பரேசன் யாழ்தேவி, 28-9-93 இல் சிறிலங்கா இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல் திட்டத்தின்படி ஆனையிறவில் இருந்து சாவகச்சேரி வரை யாழ் கடல் நீரேரியின் வடகரை ஓரமாக ஒரு இராணுவ வேலிஅமைத்து குடாநாட்டுமுற்றுகையை பூர்த்தி செய்வதே நோக்கமாகும். ஆனால், ஒப்பரேசன் யாழ்தேவி படுதோல்வி அடைந்ததும் மீண்டும் கிளாலிக் கடற்பரப்பிலான மோதல்கள் இடம் பெறலாயின.

ஆயினும் ஒப்பரேசன் யாழ்தேவியின் பின்னர் யாழ் கடல் நீரேரியில், கடற்புலிகளுடனான மோதலை தவிர்த்துக் கொள்வதில் கடற்படையினர் அக்கறை காட்டினர்.

## 'ஒப்பரேசன் தவளை'யும் கடற்புலிகளும்

இந் நிலையில்தான் பூநகரி முகாம் மீதான 'ஒப்பரேசன் தவளை' தாக்குதல் நடவடிக்கை விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டது. இதில் கடற்புலிகளின் பங்கு பெரும் பாராட்டிற்குரியதாக இருந்தது. இத்தாக்குதல் தொடங்கி சில மணிநேரத்திலே நாகதேவன் கடற்படைத் தளம் கடற்புலிகளின் கையில் வீழ்ந்தது. இத்துடன் யாழ்ப்பாணக் கடல் நீர் ஏரியின் பூரண கட்டுப்பாடும் கடற்புலிகளிடம் வந்தது.

ஆனால்இச்சமரில், கடற்புலிகளின் சாதனையானது தனியாக நாகதேவன் கடற்படைத் தளத்தினை வெற்றிகரமாக கைப்பற்றியது மட்டு

...ளார். இவ்வாறாகவும் முயற்சி ஆனையிறவுச் சமரைத் தொடர்ந்து (ஆ.க.வெ) மிக வேகமாகவும், துரிதமாகவும் மேற்கொள்ளப்பட்டது. இச் சமயத்தில் திரு. சூசையும் கடற்புலிகளின் விசேட தளபதியாக நியமிக்கப்பட்டார்.

கடற்புலிகளின் ஆரம்ப கால நடவடிக்கைகள் சிறிலங்காவை கடற்படையின் ரோந்துப் கப்பல்களுக்கும், கண்காணிப்புக் கப்பல்களுக்கும் இடையூறு விளைவிப்பனவாகவே இருந்தன. இதற்கு கரும்புலித் தாக்குதல்கள், கண்ணிவெடித் தாக்குதல்கள், நேரடி மோதல்கள் என்ற ரீதியில் போர் வடிவங்களும் அமைந்தன. இத் தாக்குதல்கள் வடபிரதேசத்தை சூழவுள்ள கடற் பிரதேசத்தில் பரவலாகவே இடம் பெற்றதெனலாம்.

இந்த வகையில் இரண்டாம் கட்ட ஈழப்போரில் கடற்புலிகளின் நடவடிக்கைகளையும் போர் வடிவங்களையும் கொண்டு மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கலாம்.

1. ஆனையிறவுச் சமருக்கு முற்பட்ட காலம் (1990யூனில் இருந்து 1991 யூன்வரை)

2. யாழ். குடாநாடு முற்றுகை முயற்சி தொடங்கும்வரையான காலம் (1991 யூலையில் இருந்து 1992 யூன் வரை)

3. யாழ். கடல் நீரேரிக்கான போராட்ட காலம், அதற்குப் பிற்பட்ட காலமும். (1992 யூனின் பின்)

## 1990யூனில் இருந்து 1991 யூன் வரை

இந்தப்பாகுபாட்டின் அடிப்படையில் ஆனையிறவுச் சமருக்கு முற்பட்ட காலத்தில், கடற்புலிகள் குறிப்பிடும்படியாக இரு கரும் புலித்தாக்குதல்களை மேற்கொண்டனர். வடகடலில்வைத்து, சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான

## 1991 யூலை இருந்து 1992 யூன் வரை

இந்நிலையில்தான், ஆனையிறவுச் சமர் முடிவுற்றபோது தலைவர் பிரபாகரனின் கவனம் கடற்புலிகளின் பக்கம் திரும்பியது. கடற்புலிகளின் செயற்பாட்டிற்கும் புத்தூக்கம் கொடுக்கப்பட்டது.

இதன் விளைவாக, கடற்புலிகளின் தாக்குதல்களும் அதிகரித்ததெனலாம். இக்காலப்பகுதியில் அதாவது, யாழ். முற்றுகை முயற்சிதொடங்கும் வரையான காலப்பகுதியில், சிறிலங்கா கடற்படையின் ரோந்துப் படகுகள் மீதே புலிகளின் கவனம் இருந்ததெனக் கொள்ளலாம். ரோந்து படகுகள் புலிகளின் கண்ணிவெடிக்கு இலக்கானதோடு, நேரடித் தாக்குதல்களுக்கும் உள்ளாகின.

இந்தவகையில், நயினா தீவிற்கும், காரைநகரிற்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் இரு ரோந்துப் படகுகள் கடற்புலிகளின் தாக்குதலுக்குள்ளாகி மூழ்கின. 22-09-91இல் நடந்த இத்தாக்குதல் நயினாதீவு இறங்கு துறைக்கு அண்மையில் இடம்பெற்றது.

02-10-91 இல் நடந்த இரண்டாவது தாக்குதலின் போது ரோந்துப்படகு வழிமறித்துத் தாக்கப்பட்டது. இத்தாக்குதலே, கடற்புலிகளுக்கும், சிறிலங்கா கடற்படைக்கும் இடையில் நடந்த முதல் நேரடி மோதலாகும். சுமார் 45 நிமிடம் வரையில் நடந்த இம்மோதலில், ஐந்து கடற்படையினர் கொல்லப்பட்டதோடு, ஆயுதங்கள் பலவும் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதைத் தொடர்ந்து 27-02-92 தாளையடிக் கடலில் ரோந்துப் படகு மீது ஒரு நேரடித் தாக்குதலும், 03-04-92 இல் மாதகல் கடற்பரப்பில் ஒரு கண்ணி வெடித் தாக்குதலும் நடத்தப்பட்டதெனலாம்.

டியது. இந்தியாவும் அதற்குப் பச்சைக் கொடி காட்டியிருந்தது. இந்நிலையில் ஆழ் கடலில் இந்திய கடற்படையின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்ட சிறிலங்கா கரையோரத்தில் தனது பலத்தை அதிகரித்ததோடு, ஆழமற்ற கடற் போருக்கு நீருந்து விசைப்படகைப் பெரிதும் நம்பியதோடு கரையோர ரோந்துகளையும் அதிகரித்திருந்தது.

இந்நிலையில், 1992 - இல் யூன் மாதம் யாழ்ப்பாணக் குடா நாட்டின் இறுதிக்கட்ட முற்றுகையை நிறைவு செய்வதோடு யாழ்ப்பாணக் குடாநாடின் மீதான இறுதிக்கட்ட தாக்குதலுக்கும் சிறிலங்கா இராணுவம்தயாரானது. இந்நிலையில், 28 - 06 - 92 இல் ஒப்பரேசன் பலவேகய 11 ன் மூலம் கொம்படி - ஊரியான் பாதையும் மூடப்பட்டது.

இந்நிலையில் குடாநாட்டின் மீதான தரைவழி முற்றுகையை சிறிலங்கா இராணுவம் நிறைவு செய்தது எனலாம், இம் முற்றுகையுடன் குடாநாடு முழுமையாக முற்றுகையிடப்பட்டதாக சிறிலங்கா தரப்பிலும் நம்பப்பட்டது.

## கடல்வழிப்பாதை திறப்பு

ஆனால், குடா நாட்டிற்கு தரைவழிப்பாதை மூடப்பட கடல்வழிப்பாதை திறக்கப்பட்டது. ஆனால் ஏற்கனவே யாழ் கடல் நீரேரிப் பகுதியில், நாகதேவன் துறையில் சிறிலங்கா கடற்படை இறங்கு துறை ஒன்றை அமைத்திருந்தது. இவ்இறங்குதுறை மூலம் கடல் நீரேரிப் பகுதியூடாக ஆனையிறவு முகாமுடன் விநியோக வழித்தொடர்பையும், ரோந்து நடவடிக்கையையும் மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில், யாழ் கடல் நீரேரியில் கிளாலிக்கும்

கடற்படை மேற்கொண்டது.

அதாவது யாழ் குடா நாட்டின்மீது இறுதி முற்றுகையை கடற்படையினர் நிறைவேற்ற முற்பட்டனர். மண்டைதீவிற்கும் கல்முனைக்கும் இடையில் உள்ள ஒடுங்கிய கடற்பரப்பை அவதானிப்பதன் மூலம், யாழ் கடல் நீரேரியில் நாகதேவன் துறைக்கும் - ஆனையிறவிற்கும் இடையில் உள்ள பகுதியை கண்காணிப்பதன் மூலம் இம்முற்றுகைத்திட்டம் இறுதி வடிவத்திற்குள் கொண்டு வரத்திட்டமிடப்பட்டது.

## கடல் நீரேரிக்கான போராட்டகாலம்

இந்நிலையில், கடற்புலிகளின் செயற்பாடுகளும் யாழ் கடல் நீரேரிப்பகுதியில் அதிகரிக்கப்பட்டது. இதில் ஒரு அம்சமாக, 29 - 08 - 92 இல், மண்டைதீவில் ஒரு அதிரடி நடவடிக்கை மூலம் நீருந்து விசப்படகு ஒன்றை கைப்பற்றிய கடற்புலிகள், 27 - 02 - 1993 இல் கண்ணி வெடித்தாக்குதல் ஒன்றின் மூலம், கிளாலிக்கடலில் ரோந்துப் படகு ஒன்றையும் மூழ்கடித்தனர்.

இந்நிலையில் தான் கடற்புலிகளின் முன்மற்றுமொரு பெரும் பொறுப்பு முன்வைக்கப்பட்டது. கிளாலிக்கடலில் கடற்படையினர் புரியும்படு கொலைகளில் இருந்து மக்களைப்பாதுகாக்கவேண்டியதே அதுவாகும். இதனால் இதுவரை தாக்குதல் அணியாக மட்டுமே செயற்பட்ட கடற்புலிகளின் அணி மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய ஒரு அணியாகவும் செயற்படவேண்டிய நிர்ப்பந்தம் உருவானது இதன் காரணமாகக் கிளாலி கடற்பரப்பில் தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்த வேண்டிய அவசியமும் கடற்புலிகளுக்கு ஏற்பட்டதெனலாம்.

நடைபெறும் தினங்களாக மாறின. இம்மோதல்கள் சில தினங்களில் பலமணி நேரமும் நீடித்தன.

இதன் காரணமாக கடற்புலிகள் கடற்போரில் தேர்ச்சியும், வளர்ச்சியும் பெற்ற அதேவேளை புதிய போர்

...த்தது. அதேசமயம் சிறிலங்காவின் கனரக ஆயுதங்கள் பொருத்தப்பட்ட எந்த அதிவேக ரோந்துப் படகும் கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்பது நிரூபிக்கப்பட்டது.

இவ்வாறாக கடல்வழி முற்

கரமாக கைப்பற்றியது மட்டுமல்ல, தாக்குதல் தொடங்கி விடுதலைப் புலிகள் பூநகரி முகாம் பகுதியில் தரித்து நின்ற மூன்று தினங்களிலும், சிறிலங்கா இராணுவத்தின் தரையிறக்கத்தையும் தடுத்து நிறுத்திய பெருமையும்

(7ஆம் பக்கம் பார்க்க)

# வீரக்கடற்புலி வெற்றி குவித்தது

### பல்லவி

இந்தக்கடல் ஈழத்தமிழரின் சொந்தக் கடல்.
இன்று ரத்தம் சிந்திச் சிவந்திடும் தந்தைக் கடல்.
பொங்கிப் பகை வெல்லக் கடற்புலி போகும் கடல்.
பிரபாகரன் தோன்றிய ஊரைத்தழுவிடும் வீரக்கடல்.

### சரணம்

எங்கள் எதிரிகள் இன்று தொலைந்தனர்.
வந்தபகைவர்கள் நின்று கலங்கினர்.
தங்கமணித் தமிழ் ஈழம் சிரித்தது.
தாவும் கடற்புலி வேகம் எடுத்தது.

தாளம் தட்டு ! மேளம் கொட்டு !
தலைவன் பேரில் பாடல் கட்டு.

நாகதேவன்துறை நேரில் பணிந்தது.
நாலுதிசைகளும் காலிற் குனிந்தது.
வேகப்படகுகள் கையிற் கிடைத்தது
வீரக் கடற்புலி வெற்றி குவித்தது.

தாளம் தட்டு ! மேளம் கொட்டு !
தலைவன் பேரில் பாடல் கட்டு.

வந்த துயரங்கள் இங்கு எரிந்தது.
வாசற் கதவுகள் யாவும் திறந்தது.
பொங்கும் கடலெல்லாம் எங்களுக்கானது.
போரிற் கடற்புலி சங்கெடுத்தூதுது.

தாளம் தட்டு ! மேளம் கொட்டு !
தலைவன் பேரில் பாடல் கட்டு.

- புதுவை இரத்தினதுரை -

(''கடலிலே காவியம் படைப்போம்'' பாடல் ஒலிப்பதிவு நாடாவில் ஒரு பாடல்)

# காங்கேசனில் கட்டளைக் கப்பல் தகர்ப்பு
# கடற்புலிகளின் போர்முறை புதிய பரிமாணம்

16 ந் திகதி அதிகாலை, சிறிலங்கா பாராளுமன்ற தேர்தலின், வாக்களிப்பு தினத்திற்கான, கடைசியான பாதுகாப்பு ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டிருந்த படைத்துறையின் உயரதிகாரிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வந்த செய்தி அதிர்ச்சியை மட்டுமல்ல, இது எவ்வாறு நடந்திருக்கும் என்ற வியப்பையும் தந்து விட்டிருந்தது.


காங்கேசன்துறை துறைமுகம் கிழக்காலும், மேற்காலும், தெற்காலும், பல மைல் தொலைவு வரை படர்ந்திருந்த இராணுவ ஆக்கிரமிப்பில், பாதுகாப்பாக அமைந்திருந்த படைத்துறைத் தளம் வடக்கே, பல மைல் கடல் எல்லைவரை, கண் காணிப்பு புலத்தை கொண்டிருந்த, பாதுகாப்பு பிரதேசம் ரோந்துப் படகுகள் இடைவிடாது ஓடித்திரியும் கடற்பிரதேசம் இவை அனைத்தையுமே பொய்யாக்கி காட்டிக் கொண்டிருந்தன, உயரத் தீ கிளப்பி எரிந்து கொண்டிருந்த கடற்படைக் கட்டளைக் கப்பலும் போறா படகும்.

கடற்புலிகளின், விசேட கொமாண்டோ அணியினர் தமக்களிக்கப்பட்ட பணியை முடித்து தமது தளத்திற்கு திரும்பிக் கொண்டிருந்த நேரத்தில், பாதுகாப்பு அமைச்சு, காங்கேசன் தாக்குதல் செய்தியை, வெளியில் விடாது மூடி மறைக்க பலத்த முயர்சிகளை மேற்கொண்டிருந்தது. தாக்குதல் சம்பவம், இராணுவ, அரசியல் பரிமாணங்களில், ஏற்படுத்திக் கொண்டிருந்த பாதிப்பு இப்போதைக்கு நீங்கமாட்டாது என்பதை பாதுகாப்பு அமைச்சு உணர்ந்திருந்தது.

வடக்கின் மிகப் பெரிய இராணுவ, விமான படைத்துறைத் தளமான பலாலியுடன், நேரடியான தொடர்பை காங்கேசன் துறை தளம் கொண்டிருந்தது. இராணுவத்திற்கான, கடல் வழி வினியோகப் பாதையிலும் காங்கேசன்துறைமுகம், மிக முக்கிய இடத்தை பெற்றுள்ளது. வட பாலிருக்கும், கடற்படைத்தளங்களான, காரைநகர்மற்றும் வெற்றிலைக்கேணி என்பவற்றுக்கு மத்தியில் காங்கேசன் துறைமுகம் அமைந்திருந்தது, கடற்படையினரின் நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவியாக இருந்து வந்தது.

துறைமுகத்தின் மேற்குப்புறமாக, உயர்ந்து செல்லும் காங்கேசன்- கீரிமலை பிரதான வீதியும், கிழக்குப் புறமாக, மயிலிட்டி, பலாலி வரை தொடரும், இராணுவப் பிரதேசமும், கடல்வழியான கண்காணிப்பை, காங்கேசன் துறைமுகத்துக்கு வழங்கிக் கொண்டிருந்தன.

இவற்றையெல்லாம் கடந்து ஆண் போராளிகளோடு, பெண் போராளிகளையும் கொண்ட கடற்புலிகளின் விசேட அணி ஊடுருவி, நடத்திய தாக்குதல், இராணுவத்தினரின் 'பாதுகாப்பு வலயங்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குரியதாக்கியுள்ளது.



விடுதலைப் புலிகளின் கரும்புலிப் படையினர், பலாலி விமானத் தளத்தில் நடத்திய தாக்குதலின் சுவடுகள் மறையு முன்பே, அதனோடு இணைந்த காங்கேசன்துறை துறைமுகத்தினுள் கடற்புலிகள் நடத்திய இத்தாக்குதல், வடபாலிருக்கும். இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களின் பாதுகாப்பையும், பெரியளவிலான நிலப்பரப்பினையும், கடற்பரப்பினையும் ஆக்கிரமித்து இராணுவக் காவலரண்களை எத்தனை மைல் நீளத்துக்கு அமைத்தாலும் அவற்றினூடு உட்புகுந்து தாக்கும் புலிகளின் போர்த்திறனையும் எடைபோட வைத்துள்ளது.

மக்களற்ற சூனியப் பிரதேசங்களான இராணுவத்தினரின் பாதுகாப்பு வலயத்தின், அகன்ற எல்லைகள் கூட பிரயோசனமற்றுப் போவதையும் இத்தாக்குதல்கள் காட்டியுள்ளன.

நிலப்பரப்பிலான எதிரியின் எல்லைக்குள் ஊடுருவுவதற்கு, இயற்கை கூட காப்பரணாகி விடலாம். ஆனால் கடற்பரப்பில் தொலைதூரம் வரை மறைப்பற்ற வெளியில் ரேடார்களின் இயந்திரக் கண்களையும் மீறி, எதிரியின் நெற்றியில் அடித்துவிட்டு வருவதற்கு, மனோதிடமும், செயற்திறனும் வேண்டும். கடற்புலிகளின் இத்தாக்குதலானது, விடுதலைப்புலிகளின் போர்த்திறன் வளர்ச்சியில் ஒரு புதிய பரிமாணத்துக்குள் சென்றிருக்கின்றது,

கடற்புலிகளின் போர் முனைத்திட்டத்தின் ஒரு புதிய வடிவமாகவே விசேட அணியின் கொமாண்டோ பாணியிலான இத்தாக்குதல் அமைந்திருக்கிறது. கடற்படையின் போர்ப்படகுகளை வழிமறித்துத் தாக்கியும், கரும்புலித் தாக்குதல்களின் மூலமும், போர் முனைகளை செயற்படுத்தி வந்த கடற்புலிகள் எதிரியின், பலம் மிக்க எல்லைக்குள், நடத்திய இத்தாக்குதல் கடற்போரின் வரலாற்றில் ஓர் புதிய திருப்பமாகவே அமைந்திருக்கிறது

கடற்புலிகளின் விசேட அணியினர் நடத்திய இத்தாக்குதலில், ஆண்போராளிகளோடு, பெண்போராளிகளும் இணைந்து தாக்குதல் நடவடிக்கையில் பங்கேற்றிருப்பது, கடலிலும், தங்களால் வரலாற்று சாதனைகளை படைக்கமுடியும் என்பதை பெண்போராளிகள் நிரூபித்திருப்பதைக் காட்டுகின்றது; கொமாண்டோ பாணித்தாக்குதலென்றில், அதுவும்கடற்பரப்பில் பெண் போராளிகள் ஈடுபட்டிருப்பது உலகில் முன்னுதாரணங்களில் ஒன்றாகும். இந்த வகையில், இச்சம்பவத்தில் வீரச்சாவடைந்த முதலாவது பெண் கடற்கரும்புலி அங்கயற்கண்ணியினது வியத்தகு சாதனை உலகின், கடற்போரின் வரலாற்றுப் பக்கங்களில் நிச்சயம் பதிவு செய்யப்படும்.

காங்கேசன் துறைமுகத்தில் தகர்க்கப்பட்ட கட்டளைத் தாய்க் கப்பல், கடற்படையினரின் யுத்தக் கப்பல்களின் கையிருப்பில் மிக முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. மூன்று ரேடார் சாதனங்களை கொண்டிருந்த இக்கப்பல், ஆயிரத்துக்கும் அதிகமான படையினரை ஏற்றிச் செல்லக் கூடியது. சிறிலங்கா படையினரின் ஆக்கிரமிப்பு முயற்சிகளில், இக்கப்பல் பெருமளவில் உதவி வந்திருக்கின்றது. இக்கப்பலிலிருந்த ரேடார் மூலம், காங்கேசன் துறைமுகத்திலிருந்து முன்வந்து நிலை கொண்டால் பருத்தித்துறை கடற்பிரதேசம் வரை, கடற்பரப்பில் நடமாடும் எந்த ஒரு பெரிய படகையும் கண்காணிக்க முடியும். இக்கப்பலில் பொருத்தப்பட்டுள்ள தொலைத் தொடர்புச் சாதனம் மூலம் கொழும்பிலுள்ள கடற்படைத் தலைமையகத்துடன் நேரடித் தொடர்பு கொள்ள முடியும். ஒருமாதகாலம்வரை, குறிப்பிட்ட ஓரிடத்திலேயே தரித்துநின்று கடற் கண்காணிப்பை இக்கப்பலிலிருந்து மேற் கொள்ளமுடியும்.

இவ்வாறான பெரியதொரு யுத்த தளபாடத்தை சிறிலங்கா கடற்படையினர் இழந்துள்ளது, படைத்துறையில் இலகுவில் சீரணிக்க முடியாத தகவலாகவே இருந்து வருகின்றது.

எவ்வளவு தூரம் இத்தாக்குதல் பற்றிய விபரங்களை மூடிமறைக்க முடியுமோ அவ்வளவு தூரம் மூடி மறைக்க முயற்சித்து வந்தது சிறிலங்கா அரசு. இவ்வாறான நிலைப்பாடே இத்தாக்குதலின் முக்கியத்துவத்தை காட்டி நிற்கின்றது தாக்குதலில் ஏற்

**ரகுராம்**

பட்ட இழப்பு அரசியல் ரீதியாகவும் தென்னிலங்கையில் முக்கியமான ஆட்சி மாற்றம் நடைபெற்ற காலப் பகுதியில் கவனஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தது.

தாக்குதல் பற்றியும் இழப்புக்கள் பற்றியுமான செய்திகள் வெளிநாட்டுச்செய்தி நிறுவனங்களினால் மட்டுமே வெளியிடப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் தோல்வி பெரும்பாலும் உறுதியாகிவிட்ட நிலையில், வாக்களிப்புத் தினத்தில் நடைபெற்ற இத்தாக்குதல், ஐக்கிய தேசியக் கட்சியை மேலும் படுதோல்விக்குக் கொண்டு செல்லும் என்ற அரசின் எண்ணமே இந்த மூடிமறைப்புக்குக் காரணமாகும்.

இராணுவரீதியில், இத்தாக்குதல் மூலம் எந்த ஒருமையப்படுத்தப்பட்ட பாதுகாப்பு நிலையத்தையும் தங்களால் தகர்க்க முடியும் என்பதை புலிகள் மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார்கள். இராணுவரீதியில் இத்தாக்குதல் மூலம் விடுதலைப்புலிகள்பெற்றுள்ள வெற்றி, அரசியல் ரீதியாகவும் விடுதலைப் புலிகளின் மேலாதிக்கத்தை வலியுறுத்தி இருப்பதை மறுக்க முடியாது.

---

## பாலர் பாடசாலை

## மாணவர்க்கிடையிலான போட்டிகள்

அனைத்துலக விவசாயிகள் தினத்தை முன்னிட்டு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள் பாலர் பாடசாலைமாணவர்களுக்கிடையிலான பேச்சு, பாட்டு, நடனம். அபிநயம் போட்டிகளை நடாத்தவுள்ளன. இவை தொடர்பான தகவல்களை 10-09 94 க்கு முன் உரிய பிரதேசங்களில் உள்ள பனை தென்னை வள அபி கூட்டுறவுச் சங்கங்களில் பெற்று பாலர் பாடசாலை மாணவ மாணவிகள் போட்டிகளில் கலந்து சிறப்பிக்க ஆவன செய்யும்படி பாலர் பாடசாலை நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,

வடமாகாண பதெ வ. அ கூ. ச சமாசம்
இல, 499, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்

(சி-10214)

---

## பிளாஸ்ரிக் பரல்கள் தேவை

எமது அங்கத்துவ நிறுவனங்களான பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள் ஆகியவற்றின் உற்பத்திகளை பாதுகாக்க பிளாஸ்ரிக் பரல்கள் தேவைப்படுகிறது இப்பரல்களை விற்க விரும்புவோர் தங்கள் பிரதேசத்தில் உள்ள மேற்படி எமது நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
விலை பேசித் தீர்க்கப்படும்.

பொதுமுகாமையாளர்,

வடமாகாண ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்

இல. 499,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி'10215)

---

## தியாகி திலீபன்

## 7 ஆம் ஆண்டு நினைவு தின

### கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகள்

தமிழீழ மாணவர்களே!
விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு
மகளிர் பிரிவினர்
அளிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
உங்கள் படைப்பாற்றலைக் காட்டிப் பெறுமதிமிக்க
பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றுமகிழுங்கள்

போட்டி விதிமுறைகள்: 22-08-94 ஈழநாதம் பார்க்கவும்

போட்டி முடிவுத் திகதி 10-09-94

விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு (மகளிர்)

(சி-10169)

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தினரின்

# புதியதோர் உன்னதசேவை

வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களை பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பட்டணங்களுடன் இணைக்கும் சிற்றூர்திச்சேவை.

★ ★ ★

உடுத்துறையிலிருந்து புறப்பட்டு தாளையடி, மருதங்கேணி, நாகர்கோவில், வல்லிபுரக்கோவில், மந்திகையூடாக, பருத்தித்துறை சென்றடைந்து அங்கிருந்து மந்திகை மாலுசந்தி, உடுப்பிட்டி ஊடாக யாழ்ப்பாணம் சென்றடைந்து, மீண்டும் அப்பாதைகள் ஊடாக, தாளையடி உடுத்துறையை வந்து சேரும்.

★ ★ ★



## நேர அட்டவணை

### புறப்படும் நேரம்

| | |
|---|---|
| உடுத்துறை காலை | 6.15 |
| தாளையடி | 6.35 |
| மருதங்கேணி | 6.45 |
| நாகர் கோவில் | 7.20 |
| வல்லிபுரக் கோவில் | 7.50 |
| பருத்தித்துறை | 8.25 |
| மாலுசந்தி | 8.40 |
| நவிண்டில் | 8.45 |
| உடுப்பிட்டி | 8.50 |

9-40க்கு யாழ் சென்றடையும்.

### திரும்பும் நேரம்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | பி. ப. | 3-20 |
| பருத்தித்துறை | பி. ப. | 4.45 |

6.20க்கு உடுத்துறையை வந்து சேரும்

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம் மருதங்கேணி.

(9234)

யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு..

ஆசைகள் மின்னல் போன்றவை.
அவை எங்கும் பாயும் என்பதை
அவை தாக்குவதற்கு முன்பு கூற முடியாது.
- ஜீன் பப்திஸ்த் லக்கோர்தேர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 01-09-1994

தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் 05


## இராணுவச் சதி?

சிறிலங்கா அரசியலில் இராணுவச் சதிப்புரட்சி பற்றி அடிக்கடி பேசக் கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி வருவதாகவே தெரிகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக, அண்மைக் காலத்தில் குறுகிய கால இடைவெளியில் இரண்டு இராணுவச் சதிப்புரட்சி பற்றிய பேச்சுக்கள் / தகவல்கள் வெளிவந்ததைக் கூறலாம்.

முதலாவது சதிப்புரட்சி பற்றிய பேச்சானது இவ் வருட ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பெரும் நெருக்கடிநிலை உருவாகியபோது எழுந்தது. காமினியின் வருகையுடன் ஐ.தே.க விற்குள் ஓரங்கட்டப்பட்ட அமைச்சர் கூரே, மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவுடன் இணைந்து சதி செய்யத் திட்டமிட்டதாகத் தகவல்கள் வெளியாயின.

ஆனால், அது குறித்து வெளிவந்த தகவல்கள் [illegible]யளவு இல்லாததோடு அதற்கான அரசியற் சூழ் [illegible] கனிந்திருக்கவில்லை என்பதால் அது பேச்சோடு [illegible]னதொன்றாகவே இருந்தது. இருப்பினும், இது [illegible]ற்றி விசாரணை எவையும் நடந்ததாகவும் இல்லை

ஆனால், தற்பொழுது - அதாவது தேர்தல் நடந்த வேளையில் - மேற்கொள்ளப்படத் திட்டமிடப்பட்டிருந்த இராணுவச்சதி பற்றிய தகவலை முன்னதுபோல் முற்றுமுழுதாகவே புறக்கணித்து விடக் கூடியதாகத் தெரியவில்லை. ஏனெனில், குற்றச்சாட்டுடன் ஒருவர் மட்டுமல்ல, பலர் குறித்தும் பேசப்படுவதோடு சம்பந்தப்படுத்தப்பட்டதாகப் பேசப்படுபவர்கள் இதனைச் செய்யக் கூடிய ஆற்றல் பொருந்தியவர்கள் என்பதும் மறுப்பதற்கில்லை.

இருப்பினும் இராணுவச் சதிக்குத் திட்டமிட்டதா? இல்லையா? என்பதில் நாம் எதையும் அடித்துக் கூறிவிட முடியாது இது இராணுவச் சதி குறித்த விசாரணையே முடிவு செய்ய வேண்டிய விவகாரமாகும். ஆனால், விசாரணைகள் எவ்வாறு முடியினும் சிறிலங்காவில் இராணுவப் புரட்சிக்கான அச்சங்கள் இனிமேல்

# விறகு தறிப்பதற்கான ஒழுங்கு விதி அறிவிப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஏற்கனவே சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டபடி விறகு தறிப்பவர்கள் அதற்குரிய நடைமுறைஒழுங்கு விதிகளை பின்பற்றி நடந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்த நாள்முதல் யாழ் குடாநாடு ஒரு பொருளாதார முற்றுகைக்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில் வன்னியிலிருந்துகுடாநாட்டிற்கு விறகு வருவது தடைப்பட்டதனால் தமக்குரிய விறகுகளை பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். இந்நிலையில் பொதுமக்களும் விறகுத்தேவையை முதன்மையாக கொண்டு செயற்படும் நிறுவனங்களும் தனியார் அமைப்புகளும் போட்டி போட்டு பயன்தரு மரங்களை அழிக்க வேண்டிய நிலையேற்பட்டது.

இதனைக் கட்டுப்படுத்தும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் துரிதமாக சயற்பட்டதன் விளைவாக கடந்த ஆண்டு இறுதிப்பகுதி முதல் விறகுக்காகமரம்தறித்தல், கொண்டு செல்லல் ஆகியவற்றுக்கு அனுமதிப் பத்திர முறை கொண்டு வரப்பட்டது யாவரும் அறிந்ததே

அத்துடன் மரம்தறித்தலை ஒருமுகப்படுத்தும் பொருட்டு தென்மராட்சியில் ஒரு விறகு விற்பனை நிலையம் திறக்கப்பட்டு விறகு கொள்வனவாளர்க்கு விற்பனை செய்யப்பட்டும் வருகிறது.

இந்த நடவடிக்கையினால் கூடுதலான மரங்கள் தறிக்கப்படுவது தவிர்க்கப்படுவதுடன் இதன் மூலம் பெறப்படும் நிதி திட்டமிட்டவகையில் மரக்கன்றுகளை மீள் நடுகை செய்வதற்கும் சூழல் தொடர்பான மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது

இதன்படி தென்மராட்சி விறகு விற்பனை நிலையத்தில் விறகினை கொள்வனவு செய்து கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரத்தை டளை வட்ட விசேட உத்தியோகஸ்தரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும் உள்ளூரில் ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு விறகு எடுத்துச் செல்வதாக இருந்தாலும் அனுமதிப் பத்திரம் பெறுதல் வேண்டும். எனவும் இதற்குரிய விண்ணப்பப்படிவத்தினை அதற்கென நியமிக்கப்பட்டுள்ள வட்ட விசேட உத்தியோகஸ்தரிடம் பெற்று விண்ணப்பங்களை பூர்த்தியாக்கி அனுமதி பெறுதல் வேண்டும். 24 மணித்தியாலங்களே செல்லுபடியாகும் இவ் அனுமதிப்பத்திரத்தினை ஒரு தடவை மட்டுமே பய படுத்த முடியும் எனவும் வழங்கப்பட்ட அனுமதி விறகு கொண்டு செல்வதற்கு முன்னரே காலவதியாகும் பட்சத்தில் அனுமதி வழங்கிய வட்ட விசேட உத்தியோகஸ்தரினால் உறுதிப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்படல் வேண்டும் எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது

எனவே இத்தகைய ஒழுங்கு விதிகளை மீறி விறகு கொண்டு செல்லப்படுவது கண்டுபிடிக்கப்படின் அவர்கள் தமிழீழ காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுகொண்டு செல்லப்படும் விறகின் மூன்று மடங்கு பணப் பெறுமதி அறவிடப்படுவதுடன் விறகும் பறிமுதல் செய்யப்படும்.

இதில் தென்னை பனை மட்டைகள் கதியால் போன்றன கொண்டு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் தேவையில்லை எனவும் இது பற்றி மேலதிக விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டத் தொடர்பாளர் அலுவலகங்களில் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள வட்ட விசேட உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

## அதிகளவு குளிகை உண்ட நோயாளி ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

முட்டு குளிகைகளை அதிகமாக பாவித்ததால் முட்டு நோயாளி ஒருவர் மரணமானார்.

இ கேதீஸ்வரி (வயது 22) என்பவரே மரணமான வராவார்.

இவர் நேற்று முட்டு நோயினால் அவஸ்தைப்பட்டு அதை குணப்படுத்த முட்டு குளிகைகளை பாவித்தார். இது முதல் தடைவையில் குணமடையாததால் மேலும் அதிகளவு குளிகைகளை பாவித்ததால் மயக்கமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு மரணமானார். (88)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994 - 09 - 01 வியாழன் இரவு

8.01- சொல்லுங்கள் பார்க்கலாம்
8.10- சித்தமருத்துவக் குறிப்புகள்
8.20- உழைப்போம் உயர்வோம்- நிகழ்ச்சியில் சுண்ணாம்பு உற்பத்தி தொடர்பான கேள்வி பதில்
8.30- செய்திகள்
8.40- ஏட்டிலிருந்து - ''இயற்கைச் சமுதாய விஞ்ஞானம்'' என்ற நூலிலிருந்து ''விண்ணைப் பார்த்தால்'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
8.50- மலரும் மொட்டுக்கள்

### 1994 - 09 - 02 வெள்ளி காலை

7.02- மாவீரவணக்கம்
7.15- மணியாரம்
7.30- செய்திகள்
7.35- பத்திரிகைச் செய்திகள்
7.40- தாயகப் பாடல்கள்

## விபத்தில் மூவர் காயம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு குடத்தனை 6ஆம் கட்டையில் மினிபஸ் ஒன்றுகுடைசாய்ந்ததில் மூவர் காயமடைந்தனர்.

நெல்லியடி முடக் காட்டில் இருந்து நாகர் கோவில் நோக்கி சுற்றுலா சென்று கொண்டிருந்த இந்தபஸ்ஸில் பிழை ஏற்பட்டதையடுத்து தடம்புரள நேரிட்டது.

துன்னாலையைச் சேர்ந்த தெ. பிரதீப்குமார் (13), க. துஷாந்தன் (14) மற்றும் புலோலியைச் சேர்ந்த எஸ். சிறீதரன் (23) (பஸ் நடத்துநர்) ஆகியோரே காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (யோ)

# புதிய அரசுடன் இ.தொ.கா. பேச்சு நடத்துகிறது

- தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

இ.தொ.கா. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்து செயற்படுவது குறித்து இன்னும் முடிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. பேச்சுவார்த்தையில் இருதரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். பேச்சுக்களின் முடிவு குறித்து இ.தொ.காவின் முக்கியசபைகளுக்கு அறிவிக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என இ.தொ.கா. தலைவர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

காங்கிரசின் நிர்வாகசபை கூட்டத்தில் வைத்து தொண்டமான் இக்கருத்தை வெளியிட்டார் இக்கூட்டத்தில். கலந்துகொண்ட இ.தொ.கா. பிரமுகர் ஒருவர் கட்சி பொ.ஐ.முயுடன் பேச்சு நடப்பதாக கூறப்படுகிறதே என்று கேட்ட போது தொண்டமான் மேற்கண்டவாறு கூறியதாக தெரிவிக்கப்படுகிறது.

இ.தொ.கா ஒரு தொழிற் சங்கம். மலையக மக்களின் நலனே எமக்கு முக்கியம் இ.தொ.கா விற்கும் புதிய அரசுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுகள் இதன் அடிப்படையிலேயே நடத்தப்படுகிறது. பேச்சுகள் வெற்றியடையுமாயின் இது பற்றி தெரியத்தரப்படும். நாம் இதுவரை அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால்தொழிற்சங்க நடவடிக்கைகள் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டன இனி வரும் காலத்தில் இ.தொ.கா புனரமைப்பு மேற்கொள்ளப்படும் என தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

## சனியன்று சந்திரிகாவின் கண்டி விஜயம்

கடலிலே

வெளியீட்டுரையையும், பேராசிரியர் அ. சண்முகதாஸ் இயலிசைவாரிதி ந. வீரமணி ஐயர் ஆகியோர் மதிப்பீட்டுரைகளையும், திரு மு வே. யோ வாஞ்சிநாதன் நன்றியுரையையும் நிகழ்த்துகின்றனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன் ஒலி நாடாவை வெளியிட்டுவைக்க விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் சிறப்புத் தளபதி திரு. சூசை அவர்கள் ஒலிநாடாவில்பங்கேற்ற கலைஞர்களுக்கு கௌரவமளிப்பார்.

மிக நவீன கணனிக் கருவிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த ஒலிநாடாவில் கவிஞர்களான புதுவை இரத்தினதுரை, வாஞ்சிநாதன், வீ. பரந்தாமன் ஆகியோரின் பாடல்களுக்கு ஈழத்தின் தலைசிறந்த இசையமைப்பாளர் ஞர்களுடன் இணைந்து இசையமைத்து உருவாக்கியுள்ளார். தமிழீழத்தின் முன்னணிப் பாடகர்களான சிட்டு, சுகுமார் சாந்தன், ஸ்ரனி சிவானந்தன், நிரோஜன், விஜயகுமார் செல்வி விஜயலட்சுமி ஆகியோர் பாடியுள்ளனர்.

கடலெங்கும் வீரகாவியம் படைத்துவரும் கடற் புலிகளின் மகத்தான சாதனைகளை கடற் கரும்புலிகளின் உன்னத ஈகங்களை, நெய்தல் நிலமக்களின் அவலங்களை, அவர் தம் தளராத உறுதியினை இப்பாடல் ஒலிப்பதிவு நாடாவில் உள்ள பாடல்கள் எடுத்தியம்புகின்றன. தமிழ் மக்களுக்கு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் செய்தளிக்கும் பத்தாவது ஒலிப்பதிவு நாடாவான 'கடலிலே காவியம் படைப்போம்' வெளியீட்டு விழாவுக்கு அனைத்துத் தமிழ் மக்களையும் வந்து கலந்து கொள்ளுமாறு கடற் புலிகளும், கலை, பண்

ணையே முடிவு செய்ய வேண்டிய விவகாரமாகும். ஆனால், விசாரணைகள் எவ்வாறு முடியினும் சிறிலங்காவில் இராணுவப் புரட்சிக்கான அச்சங்கள் இனிமேல் தவிர்க்க முடியாதவாறு தோன்றிக் கொண்டே இருக்கும்.

ஆனால், இராணுவம் இவ்வாறு அரசியலில் பெறப்போகும் முதன்மையும் அரசாங்கத்திற்கு விடுக்கும் அச்சுறுத்தலும் எதிர்பார்க்கப்பட்டதொன்றுதான். சிறிலங்கா இராணுவம் திடீரென வீங்கிப் பெருத்தபோதும் பெருந் தொகைப் பணத்தையும், சலுகைகளையும் அது பெற்றுக் கொண்டபோதும் இது என்றோ ஒரு நாள் ஆபத்திற்கே வழிவகுக்கும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்ட விடயம்தான் ஆனால் இனவெறி ஆட்சியாளர் கண்ணை மறைத்ததால் அது கருத்திற் கொள்ளப்படவில்லை.

ஆனால் தொடர்ந்தும் அரசியலில் இராணுவத்தின் தலையீடு என்பது ஒருவகையில் தவிர்க்க முடியாத ஒன்றாகவே போகலாம். அதிலும் இராணுவத்தை இன்றைய நிலைக்குக் கொண்டு வந்த ஐ தே. கட்சியைத் தொடர்ந்தும் ஆட்சியில் இருத்துவதை அவர்கள் விரும்பியதில் தவறு இருப்பதாகவுமில்லை.

ஏனெனில், ஐ. தே. கட்சி ஆட்சி இவர்களுக்குச் செய்த உதவி கொஞ்சநஞ்சமல்ல. இராணுவத்தை ஒரு பெரும் பலம் பொருந்திய சக்தியாக மாற்றியவர்கள் அவர்களே. இதனால் ஐ தே. கட்சியினர் மட்டுமல்ல, இராணுவத்தில் உள்ள உயர் அதிகாரிகள் பலரும் லாபம் அடைந்தனர் என்பதும் உண்மையே ஆகும்.

இந்தநிலையில், தற்பொழுது ஏற்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்திருக்கலாம். அல்லது ஒத்தி வைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் சிறிலங்காவின் அரசியலில் இராணுவத்தின் தலையீடு இவற்றுடன் முடிந்து விட்டது என்று கருதினால் அது தவறானதொரு கருத்தாகவே இருக்கும்.

அத்தோடு, இராணுவம் தனியாக ஐ. தே. கட்சியை ஆட்சியில் அமர்த்த / பாதுகாக்க சதியில் இறங்கும் என்பதல்ல. வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோன்று ஐ. தே. க. மீதே அது பாயக் கூடியதாகும். அதிகாரச் சுவையை அறிந்து விட்டவர்களுக்கு யார் என்பதல்ல, தமக்கு தடையாக உள்ள யாராக இருந்தாலும் அவர்கள் அகற்றப்பட வேண்டும் என்பதே இராணுவத்தின் குறியாக இருக்கும், இந்தவகையில், பொ. ஐ. முன்னணி மட்டுமல்ல, ஐ. தே. கட்சியினரும், அரசிற்கு விசுவாசமாக செயற்படும் படைஅதிகாரிகளுமே இதனால் ஆபத்தை எதிர்நோக்கவேண்டிவரலாம்.

சனியன்று சந்திரிகாவின் கண்டி விஜயம்

# செய்தி ஒளிபரப்பு தடைக்கு ரூபவாஹினியின் தலைவர் விளக்கம்

(கொழும்பு)

அண்மையில் கண்டி தலதா மாளிகைக்கு பிரதமர் சந்திரிகாவின் விஜயம் குறித்து செய்திகள் இரவு 8 மணிக்கு ஒளிபரப்பாகும் ரூபவாஹினியின் சிங்கள செய்தியில் இடம் பெறவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த ரூபவாஹினியின் புதிய தலைவர் கே. ஒ எஸ் குணசேகர அச்செய்தி தொடர்பான வீடியோ நாடா 8 மணிக்கு முன்பு வந்து சேரமுடியாத நிலை ஏற்பட்டதே பிரதமரின் விஜயத்தை ஒளிபரப்பாமைக்கு காரணம் என்றார். போக்குவரத்து நெருக்கடியினால் கண்டியிலிருந்து கொழும்பிற்கு வீடியோ நாடாவை கொண்டுவர தாமதித்ததாக அவர் சுட்டிக் காட்டினார்,

முன்னாள் அமைச்சர்களின்

# கேள்விப்பத்திரங்கள் கோரல் புதிய அரசால் இரத்து

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர்களால் மேற்கொள்ளப்பட்ட பல கேள்விப்பத்திர கோரல்களை புதிய அமைச்சர்கள் இரத்து செய்துள்ளனர். திறைசேரி. நிதியமைச்சு, பிரதமர் சந்திரிகா ஆகியோருடன் கலந்தாலோசித்து இம்முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர்களின் கேள்விப்பத்திர கோரல் பெருமளவு கமிஷன் பெற திட்டமிட்டிருப்பதை கண்டறிந்த சந்திரிகா அவற்றை இரத்து செய்ய அமைச்சர்களை பணித்துள்ளார். வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு கோரியிருந்த 346 மில்லியன் ரூபா பெறுமதியான கேள்விபத்திர கோரலை புதிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இரத்து செய்துள்ளார்.

இதே சமயம் முன்னர் கம் உதாவ திட்டத்திற்கென செலவான நிதிகுறித்து விசாரிக்கவும் பணிக்கப்பட்டுள்ளது.

# கைத்தொழில் சந்தையில் உள்ளூர் உற்பத்தி பொருள்

எமது தேசத்தின் தன்னிறைவு நோக்கிய பொருண்மிய வளர்ச்சியை காட்டும் பல உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் நல்லூர் கைத்தொழில் சந்தையில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படும் இக் கண்காட்சியில் வடதமிழீழத்திலுள்ள பெரும்பாலான கைத்தொழில் நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் வைக்கப்பட்டுள்ளன.

உள்ளூர் நிறுவனங்களை ஊக்கப்படுத்தும் முகமாக ஒழுங்கு செய்யப்பட்ட இக் கண்காட்சியினை பெருமளவான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். பல புதிய உற்பத்திகள் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதுடன் அவற்றிற்கான பரந்த சந்தை வாய்ப்பும் இதன் மூலம் ஏற்பட்டுள்ளது.

வீ. பரந்தாமன் ஆகியோரின் பாடல்களுக்கு ஈழத்தின் தலைசிறந்த இசையமைப்பாளர் திரு. கண்ணன் இருபதுக்கு மேற்பட்ட இசைக் கலைஞர்கள் வந்து கலந்து கொள்ளுமாறு கடற் புலிகளும், கலை, பண்பாட்டுக் கழகமும் அழைப்பு விடுத்துள்ளன.

**தமிழீழக்** கடற் புலிகளையே சாரும்.

அத்தோடு, இம் மோதலில் காயப்பட்ட பெருமளவினதான போராளிகளையும் கொண்டு வந்து சேர்ப்பதில் கடற்புலிகள் ஆற்றிய பங்கு போற்றத் தக்கதாகவே இருந்தது.

பெரும் வெற்றிக்கு வித்திட்ட இத்தாக்குதலின் போது, கடற் கரும்புலிகளான மேஜர் கணேஸ், மேஜர் கோபி உட்பட கடற் புலிகளின் மகளிர் பிரிவைச் சேர்ந்த லெப். கேணல் பாமா உட்பட 30 கடற்புலிகளும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இதேசமயம், பூநகரி தளம் மீதான தாக்குதலானது கிளாலிக் கடற்பரப்பில் ஆதிக்கப் போட்டியை ஒரு முடிவிற்குக் கொண்டு வந்ததெனலாம். அத்தோடு, இத்தாக்குதலானது சிறிலங்கா இராணுவத்தின் யாழ். குடாநாடு மீதான முற்றுகைத் திட்டத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தது. சிறிலங்கா கடற்படை யாழ் கடல் நீரேரிப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட புலிகளின் ஆதிக்கம் இப்பகுதியில் வந்தது. இக்கடற்பகுதி தமிழீழ விடுதலைப்போரில் விடுவிக்கப்பட்ட முதல் கடற்பிரதேசமாக வந்தது,

ஆனால், இத்தாக்குதலின் முடிவில் இதைவிடவும் கடற்புலிகள் பெரும் நன்மைகள் சிலவற்றைப் பெற்றுக்கொண்டனர். சிறிலங்கா கடற்படையினரிடம் இருந்து கைப்பற்றிய நீருந்து விசைப்படகுகள், ராடார்கள், கனரக ஆயுதங்கள் என்பன கடற்புலிகளின் பலத்தை மேலும் அதிகரித்தன சிறிலங்கா கடற்படையைப்பொறுத்து இது எதிர்மறையான விளைவை ஏற்படுத்தியது,

## விசேட படையணியும் புதிய பரிணாமமும்

இத்தாக்குதலைத் தொடர்ந்து போரில் ஒரு மந்தநிலை ஏற்பட்டதாயினும், கடந்த மாதம் 16ஆம் திகதி அதிகாலை கடற்புலிகளின் விசேட அணியினர் காங்கேசன் துறை முகத்திற்குள் நடத்திய தாக்குதலானது, கடற்புலிகளின் போர் வடிவம் புதியதொரு பரிணாமத்தைப் பெற்றுச் செல்வதையே காட்டியது.

கடற்புலிகளின் விசேட அணியினர் நடத்திய 'கொமாண்டோ' பாணியில் அமைந்த இத்தாக்குதலானது, சிறிலங்காவின் வடபகுதிக்கான 'மிதக்கும் தலைமையகத்தையே' அழித்து விட்டது. இது சிறிலங்கா கடற்படைக்கு அதிர்ச்சியைக் கொடுக்கக்கூடியதே ஆகும்.

இத்தாக்குதலில், ஆண்களுக்கு இணையாக பெண் கடற்புலிகளும் பங்குபற்றியமையும், அதில் முதலாவது பெண் கடற்கரும்புலியாக கப்டன் அங்கயற்கண்ணி வீரச்சாவடைந்ததும் முக்கியமான அம்சங்களாகும்.

கடற்புலிகள் மேற்கொள்ளத் தொடங்கியிருக்கும் இப் புதிய போர்முறை வடிவமானது மேலும் தொடருமானால், சிறிலங்கா கடற்படை எதிர் காலத்தில் வடகடற்பரப்பில் பெரும் சவால்களை மட்டுமல்ல, பெரும் இழப்புக்களையும் சம்பாதிக்க வேண்டிவரும் என்பதில் ஐயுறவு எதுவுமில்லை.

- ஜெயராஜ்

## பொதுக் கல்வி தேர்வு மதிப்பீடு குறித்த கூட்டம்

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வின் மதிப்பீடு திட்டமிடப்பட்டபடி எதிர்வரும் 5-9-94 திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இதுதொடர்பான கலந்துரையாடல் மதிப்பீட்டு நிலைய மேற்பார்வையாளர்களுக்காக நியமிக்கப்பட்ட கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், அவர்களின் உதவியாளர்களுக்குமான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தமிழீழக் கல்விக் சழக கேட்போர் கூடத்திலும் முதன்மைத் தேர்வாளர்கள், பிரதம தேர்வாளர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை மு ப. 9 மணிக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறவிருப்பதால் சகலரும் தவறாது சமுகம் தரும்படி தேர்வு ஆணையாளர் கேட்டுள்ளார்.

## க. பொ. த. (உ / தர)பரீட்சை இன்றுடன் முடிவு

(யாழ்ப்பாணம்)

இன்றுடன் முடிவடைகின்ற க. பொ. த. உயர் தரப் பரீட்சையின் விடைத்தாள்களை கொழும்பிற்கு உடன் எடுத்துச் செல்ல பரீட்சைத் திணைக்களத்தில் இருந்து வந்த ஒருவர் தயாராக உள்ளார் என கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்விடைத்தாள்கள் அடுத்து பருத்தித்துறைக்கு வந்து திரும்பவுள்ள ''நரோமா'' கப்பலிலேயே எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்பாக நடைபெற்ற முதலாம் கட்ட க. பொ. த. (உ/தர)பரீட்சையின் விடைத்தாள்கள் தற்சமயம் பரீட்சைத் திணைக்களத்தில் திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது (பா)(தி)

## வட-கிழக்கு ஆளுநராக தமிழர் நியமனமாகலாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு ஆளுநராக தமிழர் ஒருவர் நியமிக்கப்படலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆளுநராகக் கடமையாற்றிய லயனல் பெர்னாண்டோ தகவல் ஒலிபரப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளதனால் இப் பதவிக்கு மூத்த சுதந்திரக்கட்சித் தலைவர்களில் ஒருவரான மைத்திரிபால சேனநாயக்க நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவர் வடமத்திய மாகாண ஆளுநர் பதவியை நாடியதினால் அவர் விருப்பத்தை நிறைவேற்றும் முகமாக வட-மத்திய ஆளுநரான எச். எல். பி. ஹேருளையை ஆளுநராக மாற்றும் யோசனை முன்வைக்கப்பட்டது.

ஆனால் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவோ வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக தமிழர் ஒருவரை நியமிக்க விரும்புகின்றாராம்.

இதனாலேயே காலியாகவுள்ள வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் பதவி இன்னமும் பூர்த்தி செய்யப்படாமல் இருப்பதாக தெரியவருகின்றது.

இந்த நியமனம் தொடர்பாக பிரதமர் இப்பொழுது தமிழ்க்கட்சிகளுடன் பேச்சு நடாத்தி வருவதாக தெரியவருகின்றது

## குப்பிவிளக்கால் தீக்காயம்

படித்துக்கொண்டிருந்த சிறுவன் குப்பி விளக்கு விழுந்து தீபற்றியதில் எரிகாயங்களிற்கு உள்ளாகி யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

செல்வராசா சஜீவன்(வயது 9)என்பவரே காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார் மேற்படி சம்பவம் கொழும்புத்துறைப் பகுதியில் இடம்பெற்றது

செம்பியன்பற்று - நெல்லியான்

புனித யூதாததேயு ஆலயப்

## அயர்லாந்து விடுதலை இராணுவம் யுத்த நிறுத்தம் அறிவிப்பு

(வாஷிங்டன்)

இன்று அதிகாலையிலிருந்து பிரிட்டிஷ் அரசுக்கெதிரான ஆயுதப்போரில் யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ளப் போவதாக அயர்லாந்து விடுதலை இராணுவம்(ஐ.ஆர்.ஏ.) அறிவித்துள்ளது.

அயர்லாந்து விடுதலை இராணுவம் கடந்த 25 ஆண்டுகளாக பிரிட்டிஷ் அரசுடன் நடத்திய ஆயுதப்போரில் இதுவரை 3000 பேர் வரைகொல்லப்பட்டுள்ளனர். யுத்த நிறுத்த அறிவிப்பைத் தொடர்ந்து எவ்விதமான தாக்குதல்களிலும், தன் அமைப்பின் உறுப்பினர்கள் ஈடுபட மாட்டார்கள் எனவும் அயர்லாந்து விடுதலை இராணுவம் அறிவித்துள்ளது.

## மனித உரிமைகள் குறித்த ஆணைக்குழு நியமனம்

பொதுஜன ஐக்கியமுன்னணியின் அமைச்சரவைக் கூட்டம் நேற்று முதன்முதலில் நடைபெற்றபோது மனித உரிமைகள் தொடர்பான ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படுவது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இவ்வாறு பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறுகையில், சித்திரவதை, கொடும் தண்டனை என்பன சம்பந்தமான மனித உரிமைகள் பிரகடனம், ஊர்சிதப்படுத்துவதற்கான உடன்பாடும் காணப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## நாணயத்தாள் அச்சிடும் முந்திய அரசின்திட்டம் ரத்து

(கொழும்பு)

நாணயத்தாள்கள் அச்சிடுவதற்கு மத்திய வங்கியை அனுமதிக்கும் முந்திய அரசின் திட்டத்தை தமது அரசாங்கம் ரத்துச் செய்துவிட்டதாக பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று இசுறுபாயாவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் அங்குமேலும் கூறுகையில் 2200 கோடி வரையிலான அரசாங்க நிதி துஷ்பிரயோகம்செய்யப்பட்டு இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## பல்கலைக்கழகத்திற்கு 10 கணனிகள் தருவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்திற்கு கொழும்பில் இருந்து பத்து கணனிகள் கோமாரி கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் கோமாரி கப்பல் இன்று பருத்தித்துறை வரும் எனவும் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் மாகோ கப்பல் இன்று மாலை புறப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

## பத்திரிகைச் சுதந்திரம் சட்டமூலம் விரைவில் கொண்டுவர ஏற்பாடு

(கொழும்பு)

பத்திரிகைச் சுதந்திரம் பற்றிய சட்டமூலம் ஒன்று, பாராளுமன்றத்தில் விரைவில் நிறைவேற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

பாராளுமன்ற, விசேட உரிமையின் கீழ் பத்திரிகையாளர்களை பாராளுமன்றம் அழைத்து தண்டிப்பதும் நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை

★ இஞ்சின்ஓயில்,

★ சைக்கிள்கள், டயர்கள், ரியூப்கள்,

★ ஜெனரேட்டர்கள்,

★ நீரிறைக்கும் இயந்திரங்கள்,

வடமராட்சி

கண்டியில் விளையாட்டுப் பயிற்சியை எடுப்பதற்காக வந்திருந்தபோது பலியாக நேரிட்டது.

அதனையடுத்து பருத்திக்

## கோமாரியில் தபால் பொதிகள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு அத்தியாவசிய பொருட்களை ஏற்றி வந்த கோமாரி கப்பலில் 450 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (88) (நி)

## வேல் விமான திருவிழா

(கொழும்புத்துறை)

நல்லூர் சந்தசுவாமி கோவிலில் இன்று காலை 7 மணிக்கு சஜவல்லி - மகாவல்லி உற்சவமும், மாலை 5 மணிக்கு வேல் விமானத் திருவிழாவும் நடைபெறும். (24)

## யுத்தம் நிறுத்தப்படுவதே மக்கள் விருப்பம்

### அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

வடக்கே நடைபெறும் யுத்தம் நிறுத்தப்படுவதையே இந்நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டுள்ளனர். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து ஒருமைப்பாடான ஐக்கிய இலங்கையைத் கட்டியெழுப்பும் தார்மீகப் பொறுப்பை புதிய அரசுக்கு மக்கள் ஒப்படைத்துள்ளனர். இப்பாரிய பணியை சிராக நிறைவேற்றுவது உங்கள் முன்னுள்ள பொறுப்பாகும்.

இவ்வாறு அஸ்கிரிய பீட பீடாதிபதி பலிப்பான சிறி சந்தானந்த தேரோ தம்மிடம் ஆசிபெற்ற பிரதமர் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவிடம் தெரிவித்தார்.

## ஜனாதிபதி வேட்பாளராக விஜேதுங்கா இருப்பார்

### ஐ. தே. க. செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் அக்டோபர் 20-ம் திகதிக்கும் நவம்பர் 20-ம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு தினத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் ஐ தே கவின் வேட்பாளராக ஜனாதிபதி டி பி விஜேதுங்கா இருப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தகவலை ஐ தே, க. வின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர கடந்த திங்களன்று வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகளில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா, எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா, முன்னாள் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா ஆகியோருடன் தானும் இணைந்து ஆராய்ந்து வருவதாக தெரிவித்தார்.

அத்துடன் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவது தொடர்பாக பெரும்பாலான கட்சி அங்கத்தவர்களிடையே ஒருமித்த கருத்து காணப்படுமாயின் அது தொடர்பாக ஆராயப்படும் எனவும் தெரிவித்தார்.

## அமைச்சரவை நடவடிக்கைகள்; ஜனாதிபதிக்கு குதூகலமாம்

### அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தகவல்

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள்யாவற்றிற்கும் ஜனாதிபதி டி. பி விஜேதுங்க பூரண ஒத்துழைப்பு வழங்கியதாக தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அமைச்சரவையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் ஒத்துழைப்பு எவ்வாறு அமைந்தது? என செய்தியாளர் கேட்ட போது அவர் இவ்வாறு கூறினார்-

அவர் மேலும் கூறுகையில் அவருக்கு முன்னிலையில் அரசாங்க விடயங்கள் பேசப்பட்டன அப்போது அவர் மிகவும் குதூகலமாகத்தான் இருந்தார் அடுத்து வரும் அமைச்சரவைக் கூட்டங்களிலும்இவ்வாறே அவர் நடந்து கொள்வார் என்றே பார்க்கிறோம் என்றார்.

## மேலும் சில பொருள்களின் விலைகள் குறைக்கப்படும்

(கொழும்பு)

சீனி, கருவாடு, பால்மா ஆகியவை உட்பட பல அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்க சிறிலங்கா அமைச்சரவை தீர்மானித்துள்ளது. நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்து விளக்க நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் செய்தி தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா, நீதி அமைச்சர் பேராசிரியர் ஜீ எஸ் பீரிஸ் மற்றும் தகவல்துறை அமைச்சின் செயலாளர் லயனல்பர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

## யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர

செம்பியன்பற்று - நெல்லியான்

**புனித யூதாததேயு ஆலயப்**

# திருவிழா

வியாழன் - 1-9-94 ஆலயத் திறப்பு விழாவும்
மாலை 4.30 மணி. கொடியேற்றமும்

வெள்ளி - 2-9-94, சனி - 3-9-94
மாலை 4.30 மணி. திருப்பலி.

ஞாயிறு - 4-9-94 காலை 7-00 மணி.
திருவிழாத் திருப்பலி

ஒவ்வொரு வருடமும் புரட்டாதி மாதத்தின் முதல் ஞாயிறு அன்று திருவிழா இடம்பெறும்.

பங்குத்தந்தை
(9253) செம்பியன்பற்று

யாழ். ஸ்ரீதரில்

தினசரி காலை 10.30 மணிக்கு மட்டும்
BRUCE LEE, CHUCK NORRIS
நடித்த

**WAY OF THE DRAGON**

கராட்டிப் படம்

தினசரி மாலை 4-00, 6-00 மணிக்கு

**CIRCUS**

ஒரு சைக்கிளில் 20 பேர் பயணம்!
பந்தின்மேல் கரடியின் நடனம்!
உருளையின்மேல் யானையின் ஆட்டம்!
ஒட்டகத்தின் சாகசம்!
100 அடி உயரத்தில் இருந்து காருடன் பாயும் பெண்!
இவைகளைக்காண இன்றே வாருங்கள் ஸ்ரீதருக்கு!

(சி-10173)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ம் ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

★ இஞ்சின்ஒயில்,
★ சைக்கிள்கள், டயர்கள், ரியூப்கள்,
★ ஜெனரேட்டர்கள்,
★ நீரிறைக்கும் இயந்திரங்கள், அதற்கான உதிரிப்பாகங்கள்.
★ சீமெந்து,
★ சவர்க்காரம்,
★ பிளாஸ்ரிக் பாவனைப் பொருள்கள்,
★ மோட்டார் வண்டி ரயர்கள், ரியூப்கள்,
★ அச்சகத்திற்கான காகிதாதிகள்,
★ தட்டச்சு மற்றும் பிரதிபண்ணுவதற்கான தாள்கள்,
★ றோனியோ இயந்திரங்கள்,
★ பிரதிபண்ணும் இயந்திரங்கள்.
★ மாணவர்களுக்கான பாடசாலைப் பைகள்,
★ சத்திர சிகிச்சை உபகரணங்கள்,
★ மருந்து வகைகள்,
★ பொலித்தீன் மற்றும் மெழுகுவர்த்திகள்.

## கடனுக்கு

களின் விநியோகத்தில் ஈடுபடுகின்ற யாழ். செயலகமே தொடர்ந்தும் எங்களுக்கு உணவு மற்றும் பொருட்களை கடன் அடிப்படையில் வழங்க வேண்டும்.

அவ்வாறு முடியாதென மறுப்பது ஏற்க முடியாதது என அவை தெரிவித்தன.

(பா) (தி)

## பாணின்

பட்டது எனத் தெரிவிக்கப் பட்டது.

ஆயினும் இன்னும் சில தினங்களில் இது சம்பந்தமான கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க, புதிய அரசாங்கம் அறிவித்த விலைக்கு மாவை யாழ் மாவட்டத்தில்விநியோகம் செய்வதற்கு யாழ் புனர் வாழ்வுப் பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (தி, பா)

## வடமராட்சி

கண்டியில் விளையாட்டுப் பயிற்சியை எடுப்பதற்காக வந்திருந்தபோது பலியாக நேரிட்டது.

அதனையடுத்து பருத்தித்துறை கடலில் கட்டுமரத்தில் சென்று தொழில் செய்த கொட்டடியைச் சேர்ந்த குடும்பத்தலைவர் செல்லத்துரை-செல்லபாபு (வயது 29) கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.

'மாகோ' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்றபோது அதனருகில் 100 யார் தொலைவில் வைத்து இவர் கைதுசெய்யப்பட்டார். இவரை கைதுசெய்ய முன்னர் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதையடுத்து இவர் கடலில் குதித்ததைக் கண்ட படையினர் கயிறு கொடுத்து தூக்கிச் சென்றனர்.

கப்பல் அருகில் நடந்த இச் சம்பவத்தையடுத்து கப்பலில் வேலை செய்ய சென்ற தொழிலாளர்கள் மத்தியில் பதற்ற நிலை ஏற்பட்டது. இவர் எடுத்துச்சென்ற கட்டுமரம் பின்னர் மீட்டு கரைக்கு எடுத்துவரப்பட்டது.

மேலும் இப்பகுதியில் வீடுகள், கட்டடங்கள், பாடசாலைகள் என்பவற்றிற்கும் சேதங்கள் ஏற்பட்டிருப்பதோடு மரங்கள் பலவும் முறிந்துள்ளன.

கடற்படையினர் காங்கேசன்துறைமுதல் வெற்றிலைக்கேணிவரை இரவு இரவாக பலத்த தாக்குதலை மேற்கொண்டதையடுத்து நித்திரையில் இருந்த மக்கள் திக்குமுக்காடினர். பாதுகாப்புத் தேடி மறைவிடங்களையும், பதுங்குகுழிகளையும் நாடி ஓடினர். இரவு நேரங்களில் குடியிருப்புகள்மீது தொடுத்த பீரங்கிக்குண்டுகள் தீச்சுவாலைகளுடன் வான்பரப்பில் சீறிவந்து வெடித்துச் சிதறின.

வடமராட்சி கிழக்குப்பகுதிக் கடலிலும் குடத்தனை நாகர் கோவில் பகுதியிலும் இரவு பகலாக கடும் பீரங்கித் தாக்குதல்கள் நடந்தன.

(யோ)

பட்டன அப்போது அவர்

இதே வேளை அமைச்சர னர்.

# யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர சர்வமத குழு தலைவர் ஆலோசனை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவர நிலையான ஓர் அரசியற்தீர்வு மேற்கொள்ளவேண்டும் என்றும் இதற்கு அடிப்படையாக மூன்று விடயங்களை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் என்றும் சர்வமத குழுக்களின் பிரதிநிதிகளின் தலைவர் பண்டித மாதம்பே அஸ்மிய நாமிம பாபே தேரோ தெரிவித்துள்ளார்.

லண்டன் பிபிஸியின் சிங்கள சேவையாகிய சந்தேசியவிற்கு அவர் அளித்த பேட்டியில், மேலும் கூறுகையில் இது தொடர்பான அறிக்கையொன்றைத் தான் நேற்று பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவிடம் கையளித்ததாகவும், இதுபோன்ற பல அறிக்கைகளை சர்வமதக் குழுக்களின் சார்பில் ஐ.தே.க. அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்தபோது அவை கவனிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

"சர்வமத அமைப்பைச் சேர்ந்தவர்களின் குழுவில் உள்ளவர்கள் பல தடவைகள் யாழ்ப்பாணம் சென்றுவந்தவர்கள். அதனால் அங்குள்ள உண்மை நிலையை பெரிதும் உணர்ந்தவர்கள். நான்கூட மூன்று முறைகள் யாழ்ப்பாணம் சென்றுள்ளேன்.

எனவே வடபகுதி மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும். சாதாரண பொது மக்கள் எதிர்நோக்கும்துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் இன்றி தமது அன்றாட அலுவல்களை கவனிக்க வழிசெய்யவேண்டும். அம்மக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் தொடர்புகளையும் போக்குவரத்தையும் மேற்கொள்ள வழி செய்யப்படவேண்டும்.

இவ்விடயங்களில் தீர்வு ஏற்படுத்துதல் மட்டுமே வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் ஓர் அங்கமாக கருதமுடியும் என மேலும் தெரிவித்த அவர், இவ்விடயங்கள் பிரதமர் சந்திரிகா குமாரணதுங்காவிடம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது" எனவும் கூறினார்.

## வலயம்

இரண்டிற்கு உட்பட்ட பாடசாலையான யாழ். இந்துக் கல்லூரியில் அடுத்த தவணைக்கான வகுப்புகள் எதிர்வரும் ஏழாந் திகதி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(கி. பா)

## வடபகுதி

றும் இவரது தேர்தல் வெற்றி பிரிவினைக்கான போராட்டத்தை நிறுத்துவதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது என்றும் அரசியல்விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## பெற்றோல்

படச்சுருள்கள், அலுமினியம், மற்றும் அலுமினிய வயர்கள், வீடியோ கசெட்டுகள், புகைப்படக் கமரா, கம்பி வெட்டும் சாதனங்கள் நிலக்கரி மற்றும் மின்சாதனங்கள் என்பன மீதானதடைஉத்தரவு தொடர்ந்தும் நீடிக்கஇருப்பது குறிப்பிடத்தக்கது.

## இனப்பிரச்சினை

பது புதிய அரசின் நோக்கமாகும். இதற்காக தமிழ் மக்களுக்கும் அரசுக்கும் இடையில் நம்பிக்கைகளை வளர்ப்பதற்கு புதிய அரசு தன்னாலியன்ற சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்

தேவையான அளவு அத்தியாவசியப் பொருள்கள் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் - அவற்றை விநியோகிக்க, புலிகளும், ஆயுதமேந்திய குழுக்களும் முழுஒத்துழைப்பு தருவார்கள் என நம்புகிறேன்.

தேவையற்ற வரிகள் விதிக்கப்படாமல், நியாயமான விலையில் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை யுத்த நிறுத்தம் பற்றி அவர் குறிப்பிடுகையில் யுத்த நிறுத்தம் பற்றி மேலும் ஆராயப்பட வேண்டும் எனவும், போர்நடக்கும் பகுதிகளில் இருக்கும் இராணுவ அதிகாரிகளின் கருத்து அறியப்படவேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பீரங்கி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி எறிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இத் தாக்குதல்களின்போது பல எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

இத் தாக்குதல் காரணமாக மேற்படி பகுதிகளில் உள்ள வீடுகள் சில சேதமடைந்தன. (க)